தினத்தந்தி நூற்றாண்டு நூலகம் படிப்பகம்

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 01 ஞாயிற்றுக்கிழமை (16-07-2000) VALAMPURI ஒலி: 209

★ ஐக்கியதேசியக் கட்சி ஆரம்பித்த

யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர சகல கட்சியுடனும் பேசிவருகிறேன்!

அமைப்பாளர்கள் மத்தியில் ஜனாதிபதி உரை

[கொழும்பு விசேட நிருபர்]

பதினேராவது பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தயாராகி வரும் அதேவேளை பத்தாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நவம்பர் மாதம் முதலாம்வாரத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவிருப்பதாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்ன பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர்கள் மத்தியில் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் அலரி மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அமைப்பாளர்களும் கலந்து கொண்டார்கள்.

பதினேராவது பொதுத் தேர்தலுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியைத் தயார் படுத்துவதற்காக நேற்று முன் தினம் காலை 9 மணி முதல் இரவு 9.30 மணிவரை அலரி மாளிகையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சுமார் 12 மணித்தியாலங்கள் வரை நடைபெற்ற இக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில்: கடந்த 17 வருடங்களாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் இருவர் நேற்று கொழும்பு வந்தனர்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் மக்களின் துன்பதுயரங்கள் பற்றியும், இனவிவகாரத்தின் ஏனைய விடயங்கள் பற்றியும் ஆராய்வதற்கென ஐரோப்பிய நாடாளுமன்ற பிரிட்டிஷ் உறுப்பினர்கள் இருவர் நேற்று கொழும்பு வந்துள்ளனர்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களான றிச்சட்டேவிற், றொபேட் ஜீவன் ஆகிய இருவருமே இங்கு வந்தவர்களாவர்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் கொழும்பு வந்துள்ள இவர்கள் விடுபுலத்தில் இடம்பெயர்ந்துள்ள தமிழ்மக்களின் நிலையையும் ஆராய்வர்களென ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது. (ந-4)

பதினோராவது பொதுத்தேர்தல்

46 கட்சிகள் களத்தில் குதிக்கும் ஒரு கோடி மக்கள்வாக்களிக்க தகுதி

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இம்முறை 46 அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் சேனரத்தின தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த பொதுத் தேர்தலில் 34 அரசியல் கட்சிகளே அங்கீகரிக்கப்பட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் சமாதான வழிக்கு வந்தால் அரசியலில் இருந்து ஒதுங்கத் தயார்

டக்ளஸ் எம். பி. அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ் பேசும மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு விடுதலைப்புலிகள் தமது அணுகுமுறையை மாற்றி சமாதான வழிக்கு வந்தால் போட்டி அரசியலில் இருந்து விலகத் தான் தயாராகவிருப்பதாக யாழ் மாவட்ட எம்.பி. யும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டக்ளஸ்

(8ஆம்பக்கம் பார்க்க)

சஞ்சீவனின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியாண யாழ் இந்துக்கல்லூரிக. பொ.த உயர்தர மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் சடலம் நேற்றுமாலை 6-30 மணிக்கு அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது

சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் சஞ்சீவனின் சடலத்தை யாழ். நீதிவான்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நினைவுதினம் அனுஷ்டிப்பு

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தாக்குதல் அணித்தளபதியாக இருந்த லெப்ரினன் சிலன், ஆனந் ஆகியோரின் பதினேழாம் ஆண்டு நினைவுதினம் நேற்று வன்னிப்பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று புறப்படும் பயணிகள் கப்பலில் "ஏ" பயணச்சீட்டுக்கு இடமுண்டு

பருத்தித்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று புறப்படவிருக்கும் 'சிற்றிஒவ்றீங்கோ' பயணிகள் கப்பலில் சொற்ப வெற்றிடம் இருப்பதினால் "ஏ" பயணச்சீட்டு பதிவு உள்ளவர்கள் பயண ஆயத்தங்களுடன் காலை 7 மணிக்குமுன்னில் நிர்வாகக் காரியாலயத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புறப்படவுள்ள கப்பலில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 250 பேரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 25 பேர், பருத்தித்துறையிலிருந்து 25பேர்சுகயினமுற்றவர்களும் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

இந்துக்கல்லூரி மாணவன் சஞ்சீவனின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிப்பு

இந்துக் கல்லூரி க. பொ. த உயர்தர மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் அகால மறைவை அடுத்து நாச்சிமார் கோவிலடி யாழ் இந்துக்கல்லூரியின் வளாகத்தை அண்டிய பகுதிகளில் வாழை, தோரணங்கள், கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுமாணவர்களால் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மாணவன் சஞ்சீவனின் அகால மறைவினால் நேற்று யாழ். நகரிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் வரவின்றி வெறிச்சோடிக்காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. யாழ். நகரிலும் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டும், ஒட்டப்பட்டும் இருந்ததாக எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

[க.3, 106.12]

'பவுஸர்கள்' வந்து சேர்ந்தன எரிபொருள் தட்டுப்பாடு நீங்கும்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இரண்டு பவுஸர்கள் நேற்று முன்தினம் கப்பல் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது

மீளத் திருத்தி அமைக்கப்பட்ட இரண்டு பவுஸர்களும் தலா 13 ஆயிரத்து 200 லீற்

(8ஆம்பக்கம் பார்க்க)

இலங்கை உதவி கோரினால் இந்தியா தலையிட வேண்டும்

நட்வர்சிங் கருத்து

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் இலங்கை அரசு உதவி கோரினால் தலையிட வேண்டும் என்று காங்கிரஸின் மூத்ததலைவரும், செயற்குழு உறுப்பினருமான கே. நட்வர்சிங் கூறியுள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் பத்திரிகையாளரிடம் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதில்லை என்ற மத்திய அரசின் கொள்கையைப் புரிந்து கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.இதனிடையே பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் இலங்கை அரசிடமிருந்து வரும் கோரிக்கையைப் பொறுத்து அது இராணுவத்தலையீடா அல்லது ராஜீயத்தலையீடா என்பதை இந்திய அரசு முடிவுசெய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதிசய "சந்திரகிரகணம்" வானில் இன்று நிகழும்

(கொழும்பு)

சுமார் 150 வருடங்களுக்கு பின் நிகழவிருக்கும் பூரண சந்திர கிரகணம் இன்று இலங்கை பூராகவும் காணக்கூடியதாக இருக்கும்.

இந்த மாதத்தில் சூரியன், சந்திரன் பூமி ஒரே நேர் கோட்டில் வருவதால் இரண்டு சூரிய கிரகணமும் ஒரு சந்திரகிரகணமும் நிகழவுள்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

138348 ஏ 138348 பி
139591 ஏ 141285 ஏ
143835 ஏ 143835 பி
143870 ஏ 143876 ஏ
143916 ஏ 143916 பி
143916 சி 144004 ஏ
144004 பி 144004 சி
144041 ஏ 146271 ஏ
146271 பி 146271 சி
146285 ஏ 146307 ஏ
146307 பி 146341 ஏ
146341 பி 146342 ஏ
146353 ஏ 146398 ஏ
146416 ஏ 146419 ஏ
146419 பி 146419 சி
146419 டி 146419 ஈ
146419 எல் 146419 ஜி
146419 எச் 146425 ஏ
152504 ஏ 152512 ஏ
152512 பி 152512 சி
152512 டி 152512 ஈ
152518 ஏ 152518 ஏ
152521 ஏ 153424 பி
153424 பி

சாவகச்சேரி

144179 ஏ 144179 பி
144179 சி

கோப்பாய்

145445 ஏ 145445 பி

நல்லூர்

140911 ஏ 141168 ஏ
145507 ஏ 145508 ஏ
145558 ஏ 142117 ஏ
143889 ஏ 146287 ஏ
146305 ஏ 146305 பி
146377 ஏ 146448 ஏ
147273 ஏ 152561 ஏ
152561 பி

சண்டிலிப்பாய்

128969 ஏ 142100 ஏ
144092 ஏ 144092 பி
144092 சி 144092 டி
144410 ஏ 146317 ஏ
146322 ஏ 146328 ஏ
146328 பி 146350 ஏ
146387 ஏ 146387 பி
146451 ஏ 146984 ஏ
146984 பி 146984 சி
147041 ஏ 148253 ஏ
148253 பி 148254 ஏ
148261 ஏ 148261 பி
148272 ஏ 152509 ஏ
152509 பி 152509 சி
152509 டி 152509 ஈ
152509 எவ் 152516 ஏ
152516 பி 152516 சி
152516 டி 152516 ஈ
152547 ஏ 152547 பி
152548 ஏ 152550 ஏ

தெல்லிப்பழை

153422 ஏ

உடுவில்

145278 ஏ 127456 ஏ
127456 பி 143792 ஏ
143792 பி 143792 சி
143792 டி 143850 ஏ
143850 பி 143878 ஏ
143892 ஏ 143990 ஏ
143990 பி 143990 சி
143990 டி 143991 ஏ
146278 ஏ 146299 ஏ
146319 ஏ 146329 ஏ
146329 பி 146329 சி
146329 டி 146329 ஈ
146334 ஏ 146348 ஏ
146352 ஏ 146352 பி
146457 ஏ 146457 பி
146478 ஏ 147478 பி
153437 ஏ 153443 ஏ

(சு)

வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீகந்த சுவாமி கோவிலின் வணக்கம் செய்வோர் சபையின் 47வது வருடாந்த பொதுக் கூட்டமும் கணக்கறிக்கை வெளியீடும் வரும் 23-ஆம் திகதி மேற்படி ஆலய மண்டத்தில் நடைபெறவுள்ளது.

(உ-59)

சேவைநலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் இருபத்தைந்து வருடசேவையாற்றிய வே. சோமசேகரம் சி. சிறிகாந்தன் ஆகியோருக்கு கூட்டுஉரிமை தொழில் சங்கத்தலைவர் த. ஆனந்த நடராஜா தலைமையில் நாளை காலை 10 மணிக்கு சேவைநலன்பாராட்டு விழா நடைபெறஉள்ளது.

இன்று குருபூர்ணிமா தினம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதாதேவாச்சிரமத்தில் இன்று குருபூர்ணிமா தினம் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி, விசேட பூஜை வழிபாடுகளுடன் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (உ)

போதைப் பொருள் கடத்தல்

[கொழும்பு]

இந்தியாவில் இருந்து இலங்கை வந்த ஒருவரிடம் 6kg ஹெரோயின் போதைப் பொருளினை பண்டாரநாயக்காவிமானநிலையசுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

93 இலட்ச ரூபாபெறுமதியானபோதைப்பொருளினை கடத்திவந்த 43 வயது நிரம்பிய மேற்படிநபர் இலங்கையர் என்றுதெரியவந்துள்ளது.

மேல்விசாரணைகளின் பொருட்டு, இவர் போதைப் பொருள் தடுப்புப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிவந்துள்ளது.

(உ)

கைதடி வயோதிபர் இல்லத்திலிருந்து பெருமளவினர் நேற்று நீர்வேலியில் தங்கவைப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி வயோதிபர் இல்லத்திலிருந்து பெருமளவு வயது முதிர்ந்த ஆண்களும், பெண்களும் நேற்று நீர்வேலியை வந்தடைந்தனர்.

நூற்றிற்கும் மேற்பட்டோர் மேற்படி முகாமில் தங்கியிருந்ததாகவும் சுமார் 58பேர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த முகாமில் தங்கியுள்ள மீதமுள்ளோர் மிக விரைவில் வந்து சேர்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது:

நீர்வேலி தரவையூடாக வந்த இவர்கள் அத்தியார் இந்துக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களதுவருகையைமுன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் அங்கு விஜயம் செய்து தேவையான பராமரிப்பு வசதிகளை மேற்கொண்டு வருவதுடன் பெற்சிற், துவாய்போன்றன வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை அப்பகுதி கிராம சேவகர் சு. சண்முகவடிவேல் மேற்கொண்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

(க-3)

ஆடிப்பிறப்பு உற்சவம்

(அரியாலை)

இன்று 16-07-2000 தமிழ் ஆடிப்பிறப்பை முன்னிட்டு வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் காலை 7மணிக்கு சங்கிராந்தி தீர்த்தம் நடைபெறும். அதைத்தொடர்ந்து விசேட பூசை இடம் பெறும்.

(த 106)

★ ★ ★

வண்ணார் பண்ணை பன்றிக் கோட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஆடிப்பிறப்பை முன்னிட்டு விசேட பூசை அபிஷேகங்கள் நடைபெறும். (த-106)

கொடியேற்றம்

கோப்பாய் வடக்கு பாவனை கண்ணகை அம்மை கோயில் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (த)

குற்றமற்றவரென தீர்ப்பளிக்கப்பட்டு 9 மாதங்கள் கழிந்தபின்பும் கூட மீண்டும் வேலை வழங்கப்படவில்லை

கல்முனை வாசி முறைப்பாடு

(கல்முனை)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு பின் குற்றமற்றவரென தீர்ப்பளிக்கப்பட்டு உயர்நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டு 9மாதங்கள் கழிந்த நிலையிலும், தனது அரச பதவி மீள வழங்கப்படவில்லை எனகல்முனை வாசி ஒருவர் கல்முனைமனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

துறைமுக அதிகாரசபையில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றிய 4பிள்ளைகளின் தந்தையான தாமோதரம் தியாதரன் என்பவரே மேற்படி முறைப்பாடு செய்தவராவார்.

கடந்த 97ஆம் ஆண்டு ஆடி மாதம் 21ஆம்திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மானிப்பாயில் இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

கைதடி அரசினர் ஆயுள்வேத போதனாவைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவு நேற்று முதல் இயங்கிவருவதாக சம்பந்தப்பட்டோர்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரிவானது இலக்கம் 47, உடுவில்வீதி, மானிப்பாய். மருதடிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து 200 யார்தூரத்தில் என்ற முகவரியில் காலை 9 மணி முதல் 1 மணி வரை இயங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பெருங்குளம் பிள்ளையார் கோவிலடி சாவகச்சேரி, என்ற முகவரியில் வசிக்கும் சோமசுந்தரம் பாலச்சந்திரன் என்பவரது விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ''வலம்புரி'' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

பின்பு கடந்த வருடம்புரட்டாதி மாதம் 18ஆம் திகதி குற்றமற்றவரென உயர்நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட மேற்படி நபருக்கு துறைமுக அதிகார சபையினரால்இன்னமும் மீள வேலை வழங்கப்படவில்லை.

கடந்த 3வருடங்களாக தனது குடும்பம் மிகவும் கஷ்ர நிலையில் வாடுவதாகவும், எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்ட போதும் மீள வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கை எதையும் துறைமுக அதிகாரசபை எடுக்கவில்லை எனவும் அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

இன்று தேர்

சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் பெருமானின் தேர் உற்சவம் இன்றாகும். (த)

பரீட்சையில் சித்திபெற்றார்

மாகாண அரசாங்கசேவை தட்டெழுத் தாளர்களுக்காக நடாத்தப்பட்ட பதவி உயர்வு பரீட்சை II அப்பிரிவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் சித்தியடைந்துள்ளனர்.

இதன் பிரகாரம் இரஞ்சலா தேவி பிரதேச செயலகம் சண்டிலிப்பாய், எஸ். சிதம்பரம் தேர்தல் அலுவலகம் யாழ்ப்பாணம் கே. கந்தராசா கமநல சேவைத் திணைக்களம் யாழ்ப்பாணம் ஆகியோரே சித்தியடைந்தவர்களவர். (த-120)

தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டு பாடசாலைகளில்தொண்டர்ஆசிரியர்களாகப் பணிபுரிந்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்கப்பெறாதவர்களை நாளை காலை 10-00 மணிக்கு டி.எம்.ஜி. கல்வி நிலையத்திற்கு சமுகம் தருமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர்கேட்டுள்ளார். (உ)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கானகேள்விகள் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையினால் 25-07-2000 முற்பகல் 11.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் கேள்விச் சபையால் திறக்கப்படும். அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களே கேள்விப் பத்திரம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் 24-07-2000 நண்பகல் 12-00 மணி வரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரப்பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும்செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

	வேலை விபரம்	மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம்	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்
1.	வேதாரணியேஸ்வரா ச. ச. நிலைய கட்டடம் அமைத்தல்	100/-	200/-
2.	துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் தலைமை அலுவலகம்	100/-	200/-
3.	திருமகள் ச. ச. நிலையம் புனரமைத்தல்	150/-	250/-
4.	இளங்கோ ச. ச. நிலையம் ,,	250/-	1000/-
5.	இளங்கோ பாலர் பாடசாலை ,,	100/-	200/-
6.	குழாய்க்கிணறு திருவள்ளுவர் ச. ச. நிலையம்	50/-	150/-
7.	குழாய்க்கிணறு-ஆட்டுப்பட்டி	50/-	150/-
8.	,, -இராசலிங்கம் ச. ச. நிலையம்	100/-	200/-
9.	,, -வளர்மதி ச. ச. நிலையம்	50/-	150/-
10.	,, -குடவத்தை	50/-	150/-
11.	,, -கலிகை முருகன் கோவிலடி	50/-	150/-
12.	,, -சர்வோதயா ச. ச. நிலையம்	50/-	150/-
13.	காவில்கிராய் வீதி	250/-	1000/-
14.	ஞானசாரியார் வீதி	250/-	1000/-
15.	இராசகிராமம் பொதுக்கிணறு புனரமைத்தல்	150/-	250/-
16.	ஸ்ரீ நாரதா பொதுக்கிணறு ,,	100/-	200/-
17.	ஆண்டாவளவு பொதுக்கிணறு ,,	100/-	200/-
18.	குழாய்கிணறு - நெல்லியடி உப அலுவலகம்	100/-	200/-
19.	,, ,, பொது நூலகம்	100/-	200/-
20.	வளர்மதி ச. ச. நிலையம் புனரமைத்தல்	250/-	1000/-
21.	கலாவாணி ச. ச. நிலையம் மலசலகூடம் அமைத்தல்	100/-	200/-
22.	நெல்லியடி பொதுச்சந்தை நீர்த்தாங்கி இடித்து அகற்றுதல்	150/-	250/-

வ. நடராசா (ஜே.பி)
தலைவர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

11-07-2000

[இ/655]

யாழ். பல்கலை விஞ்ஞான பீடத்திற்கு

தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

யாழ். பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான பீடத்திற்கு 2000/2001 கல்வியாண்டிற்கு அனுமதி பெற்றவர்களின் பெயர் விபரம் கீழே தரப்படுகின்றது.

எஸ். மதன் பருத்தித்துறை
எஸ். பகீரதன் கோண்டாவில்
ரி. தர்ஷனி வவுனியா
பி. மைதிலி புலோலி
ஏ. ஐயந்தி ஆனைக்கோட்டை
ஆர். காயத்திரி கோப்பாய்
எஸ். குகப்பிரிகை யாழ்ப்பாணம்
ஆர். ரமணன் கோப்பாய்
ஆர். றேனுகா நல்லூர்
எம். தர்ஷனி மானிப்பாய்
பி. ஏ. வூல்சைட் பண்டத்தரிப்பு
ஏ ரி. கௌரிபாகன் யாழ்ப்பாணம்
எஸ். ஜெறோன் கொக்குவில்
ரி. கஜிதா மானிப்பாய்
என். நந்தகோபன் மீசாலை
ரி. விஸ்வேதிதன் சண்டிலிப்பாய்
பி. கஜேந்திரன் பண்டத்தரிப்பு
எஸ். பிரசாத் கொழும்பு
எஸ். வைதேகி கரவெட்டி
எஸ். வினோதா கோப்பாய்
கே. ஜெகஜீவகன் கொழும்பு
ஜி. நிரஞ்சன் யாழ்ப்பாணம்
என். கமல்ராஜ் சங்கானை
எஸ். செந்தூரன் சுன்னாகம்
ரி. ஜனார்த்தனன் அல்வாய்
ஜி. சசிகேஷ் இளவாலை
வை. சிவயோகராஜன் யாழ்ப்பாணம்
ரி. சுனிதா பண்டத்தரிப்பு
கே. யசோதரன் கரவெட்டி
கே. பார்த்தீபன் கல்முனை
எஸ். சசிதா வவுனியா
பி. சயந்தினி வவுனியா
ரி. சியாமசுந்தர் திருகோணமலை
எம். பிருந்தினி வட்டுக்கோட்டை
எம். சிவயாளினி சுன்னாகம்
ஐ. அஜித்தா திருகோணமலை
ஆர். தீபா புதுக்குடியிருப்பு
ஆர். பவதக்ஷினி திருகோணமலை
ரி. சர்மிளா யாழ்ப்பாணம்
எஸ். காயத்திரி முல்லைத்தீவு
எஸ் கோகுலவதனா கிளிநொச்சி
வி. திசாயினி கிளிநொச்சி
பி. ஊர்மிளா மன்னார்
சி. விதுரன் ஹற்றன்
சி. ஜெபநேசன் மன்னார்
கே. எவ். ஏ. எஸ். குமார் மன்னார்
ஜே. எவ். சகாயராணி முருங்கன் (சு)

[தொடரும்]

திருமுறைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு அருள்மிகுவள்ளப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் ஆலய பரிபாலனசபையினரின் அனுசரனையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் எடுக்கும் திருமுறைப் பெருவிழா இன்று ஞாயிறு காலை 6.00 மணிக்கு பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் நடை பெறும். (த)

கலைஞர் கௌரவிப்பு

(கல்வியங்காடு)

இம்மாதம் 18 ஆம் திகதி சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள பாலகதிர்காமம் ஆலயத்தில் கலைஞர் கௌரவிப்பு இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலய தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு வருடாவருடம் நடாத்தப்படும்கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் இவ்வருடம்நாதஸ்வரக்கலைஞர் எஸ்.பிச்சையப்பா கௌரவிக்கப்படவுள்ளார். [உ-54]

இன்று கலைஞர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கலாசார சபையினரால் நடாத்தப்படும் மூத்த கலைஞர் கௌரவிப்பு விழாவும்,பூதத்தம்பி நாட்டுக்கூத்து மேடையேற்றமும் இன்று ஞாயிறு மாலை 5.30 மணிக்கு யா/நெடுந்தீவு மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர்.திரு.ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மிருதங்கத்திற்கான கௌரவிப்பினை சின்னவன் நாகேந்திரம்,சிற்பத்துறைக்கான கௌரவிப்பினை வேலுப்பிள்ளை மதியாபரணம்,வெலிச்சோரி.பர்ணபாஸ் ஆகியோரும் நாட்டுக்கூத்துக்கான கௌரவிப்பினை.மரியான் சவிரிமுத்து, கிறித்தோ இன்னாசிமுத்து, அந்தோனி வலத்தீஸ், சைமன்.ஜேசுதாசன்,சவிரிமிக்கேல், இராயப்பு மோசேஸ்,சந்திகா தேவசகாயம்,யாக்கோபு அடைக்கலமுத்து ஆகியோர் கௌரவிக்கப்படுவார்கள். (த)

குடும்பப் பெண் தற்கொலை

(வல்வெட்டித்துறை)

அல்வாய் வடமேற்கு அட்டறந்தையைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மேற்படி சம்பவம் கடந்த புதன் அன்று காலை 10.00 மணியளவில் அவரது வீட்டில் இடம் பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தாயாரான நவநேஸ்வரன் தீபசோதி (வயது30)என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். (சு-16)

தென்கிழக்கு பல்கலையில்

பகிடிவதையை தடுக்க புதிய நடைமுறை

பழைய,புதுமுக மாணவர் சந்திக்கத்தடை

(கொழும்பு)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பகிடிவதையை தடுக்கும் நோக்கில் புதிய பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கல்விமான்கள்மற்றும் நலன்விரும்பிகளின் ஆலோசனைகளிற்கிணங்கவே புதிய திட்டங்கள் கொண்டுவரப்படுவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தவகையில் புதுமுக மாணவர்களை, பழைய மாணவர்கள் சந்திக்கத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

நூல் நிலையம், உணவு விடுதிகள் என்பன வற்றிலும் பழைய,புதிய மாணவர்கள் சந்திக்க தடை விதித்திருப்பதுடன்,இவர்கள் சந்திக்காதிருப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தா வண்ணம் பழைய நடைமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.அத்துடன்,புதிய நடைமுறைகளும் புகுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. (உ)

ஆனையிறவுச் செய்திகளை வெளியிட்டமைக்காக பதவிநீக்கம்

வெகுஜன தொடர்புப்பணிப்பாளர் வழக்கு

(கொழும்பு)

ஆனையிறவு தொடர்பான செயதிகளை வழங்கியதான குற்றத்திற்காக தன்னை வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர்,மற்றும் வெகுஜன தொடர்பு பணிப்பாளர் பதவிகளில் இருந்து நீக்கியதை ஆட்சேபித்து ரவிநாத் ஆரியசிங்க உயர் நீதிமன்றில் மனுதாக்கல் செய்துள்ளார்.

கடந்த வியாழன் உயர் நீதிமன்றில் மேற்படி மனு மீதான விசாரணை எடுத்துக் கொள்ளப் பட்டபோது, எதிர் மனுதாரர்கள் தமது மனுவை எழுத்து மூலம்தாக்கல் செய்வதற்காகஇம்மாதம் 27 ஆம்திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதேசமயம்,

மேற்படி செய்திகளையும் அது சம்பந்தப்பட்டவரை படங்களையும் வெளிநாடுகளுக்கு வழங்கியதாக குற்றம் சாட்டி பதவி நீக்கம் செய்தது தவறு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது இஸ்லாமபாத்தில் இருந்தவாறு தன்னிடம் வெளிநாடுகள் பலவும் மேற்படி இராணுவமுகாம் குறித்த செய்திகளை கேட்டதாகவும் தனது கடமையை தான் செய்திருப்பதாகவும் உயர்நீதிமற்றில்தாக்கல் செய்துள்ளமனுவில் ரவிநாத் ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இம் மனுவில் முதலாம் இரண்டாம், மூன்றாம் எதிர் மனுதாரர்களாக முறையே வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் லயனல்பெர்ணாண்டோ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

கலந்துரையாடல்

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமத்தில் இருக்கும் மாணவர்களில், தொண்டைமானாறு வெளிக்கள நிலையப் பரீட்சைக்கு தோற்றியவர்களிற்கு நாளை திங்கட்கிழமை (17.07.2000) உடுவில் மகளிர் கல்லூரியில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களைஆதாரமாகக் கொண்டு நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்குத்தோற்றிய மாணவர் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு தென்மராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த)

10,000 ரூபா மாதாந்தம் கட்டியவர்களுக்குத்தான்

தொலைபேசித் தொடர்பு; சேவை எங்கே?

வணிகர் கழகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ரெலிக்கொம் நிறுவனம் இலாப நோக்கம் கொண்டது எனவும் தற்போது மாதம் 10 ஆயிரம்ரூபாவிற்கு மேல்நிறுவனத்திற்கு கட்டியவர்களுக்கே வெளியிடங்களிற்கான தொலைத் தொடர்பில் முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட ரெலிக்கொம் நிறுவனமுகாமையாளர்எல்.கனகசூரியருடன் யாழ். வணிகர் கழகத்தினர் நடத்திய கலந்துரையாடலின் போது அவர் தெரிவித்தார் எனயாழ்.வணிகர்கழகம் வெளிபிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கடந்த இரண்டு மாதங்களாக பெரும்பாலான யாழ். வர்த்தகர்கள் தங்களின்வியாபாரம்,மற்றும் கப்பலில் பொருட்கள் ஏற்றுவதுபற்றிய விபரங்களை கொழும்பிலுள்ள முகவர்கள்,வாடிக்கையாளர்கள் ஆகியோருடன் தொலைபேசிமூலம்தொடர்பு கொள்ள எடுத்த முயற்சிகள் பலனற்றுப்போன நிலையில் கடந்த 5 ஆம் திகதி யாழ்.ரெலிக்கொம் நிறுவன மாவட்ட பொது முகாமையாளர் எஸ். கனகசூரியருடன் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி கேட்டோம். அன்று பகல் 12.00 மணிக்கு யாழ். வணிகர் கழகத் தலைவர், செயலாளர், சென்ற ஆண்டுத் தலைவர் ஆகிய மூவரும் அவரைச் சந்தித்தோம்.

சந்திப்பின் போது முதல் அவர் குறிப்பிட்ட விடயம் தான் என்ன கூறுகின்றாரோ அதனை நாம் கேட்க வேண்டுமென்பதே தற்போதுபாழ். வர்த்தகர்களுக்கோ, அன்றிப் பொது மக்களுக்கோ உதவக் கூடிய நிலையில் இல்லையென்பதனை அவரது பேச்சு எமக்குப் புலப்படுத்தியது.அவரது ஒவ்வொரு வசனமும் அவர் இலாபத்தினை நோக்கமாகக் கொண்ட ஓர் நிறுவனத்தின் அதிகாரி என்பதனைப் புலப்படுத்தியது. தங்களின் நிறுவனம் ஓர் இலாப நோக்கம் கொண்டது எனவும், தற்போது ரூபா 10,000/-இற்கு மேல் தங்களுக்கு மாதாந்தம் வருமானம்கட்டியவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுமெனவும், மற்றவர்களுக்குநிலைமைசீராகும்போது கவனிக்கப்படும் எனவும், குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் எமது வர்த்தகர்கள் கொழும்பு முகவர்களுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டுயாழ். மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொழும்பில் கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு உள்ள ஒரேபொருதொடர்புசாதனம் தொலைபேசி.

தற்போது கடலில் மூழ்கிய ''மேஷ்உகன'' கப்பலில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தமது இழப்பீடு பற்றிய விபரங்களை தமது முகவர்களிடம் இதுவரை பெறமுடியாத நிலையில் உள்ளனர். வர்த்தகர்கள் காலை 9.00 மணிக்கு வந்து கடைகளைத் திறந்த பின்பே தொலைபேசி சேவைப் பதிவு செய்து பெறமுடியும். அவர்கள் காலை 9.00 மணியின் பின் ரெலிக்கொம் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டதங்களுக்குத்தேவையான அழைப்பைப் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ளும் போது அழைப்புபதிவுகள்எல்லாம் முடிந்தது எனரெலிக்கொம்நிறுவனஊழியர் கூறிவிடுகின்றனர். இப்படியான நிலைமையை நாம் விளக்கிக் கூறியும் யாழ்வர்த்தகர்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்க முடியாது ரூபா 10.000/-த்திற்கு மேல் மாதாந்தம் தமக்கு வருமானம் செலுத்தும் தொலைபேசி முகவர்களுக்கு மட்டும் தொலைபேசி அழைப்புப் பெற்றுக் கொடுப்பதை கூறும் அதிகாரிகள், தங்களின் நிறுவனம் இலாப நோக்கோடு சேவை நோக்கத்தையும் கொண்டுள்ளது என்பதனை மறந்த நிலையில் எமக்குப் பதில் அளித்தது வருந்தத்தக்கதாக அமைந்துள்ளது.

ரூபா 10.000/- இற்கு மேல் வருமானம் தேடிக் கொடுத்தும், தாம் விரும்பும் தொலைபேசிமுகவர்களுக்கே இப்படியான ஏகபோக உரிமைகளை வழங்குவதால் அவர்கள் இச்சேவைக்கு மேலதிகமாக தாம் நிர்ணயித்தும் தொகையைப் பொதுமக்களிடம் அறவிடுவதும் பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கின்றது.

அத்துடன் பெருந்தொகைப் பணத்தைச் சென்ற ஆண்டு ரெலிக்கொம் நிறுவனத்திற்குச் செலுத்தி தொலைபேசி சேவையைப் பெற்ற வர்த்தகர்கள் தற்போது தொலைபேசியை மேசைமேல் வைத்திருப்பது வர்த்தக நிலையத்தை அழகுபடுத்துவதற்கா என்பதனை ரெலிக்கொம் நிறுவன அதிகாரிகள் உணர்வதாகத் தெரியவில்லை.

தாங்கள் ரெலிக்கொம் வாடிக்கையாளர்களை காசுக்குத்தான் முன்னுரிமை என்றால் தொலைபேசி இணைப்பைப் பெற்ற மற்றவர்களின் நிலை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. மற்ற வாடிக்கையாளர் செலவுகள் செய்து பெற்ற தொலைபேகியின் நிலை என்ன? ஒரு நாளைக்கு ஒரு வெளியிடத் தொடர்பு கொடுத்தால் என்ன? என்ற நிலையில் வாடிக்கையாளர்கள் மனக் கொதிப்பை வெளிபிடுகின்றார்கள்.

சில கஷ்ரங்கள் உண்டு என்பதனை மறப்பதற்கில்லை, ஆனால் மற்றவர்களை திருப்திப்படுத்தும் நிலையில் எல்லா வாடிக்கையாளர்களையும் திருப்திப்படுத்தினால் என்ன? ரெலிக்கொம் நிறுவனம் ஒரு சேவை நோக்கம் கொண்ட வர்த்தக நிறுவனமாக இருப்பதனால், தமது இலாப நோக்கோடு சேவையையும் கருத்திற்கொள்ள வேண்டும். அவர்கள் அதனைச் செய்வார்களா? கோரக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பது போல் ரெலிக்கொம் நிறுவனம் போன்று அதற்குப் போட்டியாக இன்னும் ஓர் வெளிநாட்டு நிறுவனத்தை யாழ். குடாநாட்டிற்கு பெறுவதற்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்வார்களா? என்ற அவாவும் எழுகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

★ வேலை வாய்ப்பை பெறக்கூடிய

பட்டதாரிகளை உருவாக்குவதே புதிய கல்வி முறையின் நோக்கு

யாழ்.பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

வேலைவாய்ப்பைஇலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதே தற்போதைய கல்விச் சீர்திருத்தத்தின் நோக்கமாகும்:

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக துணை வேந்தர் பொ: பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில்; புதிய கல்விச் சீர்திருத்தம்தொடர்பாக கடந்த ஏழாம் திகதி ஜனாதிபதியால்கூட்டப்பட்டகூட்டத்தில் இந்த ஆண்டு முடிவுக்குள் இப்புதிய சீர்திருத்தத்தை அமுல் படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் கல்வியமைச்சர், உயர் கல்வி அமைச்சர் மற்றும் பல்கலை துணை வேந்தர்கள் உட்பட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இப்புதிய சீர்திருத்தத்தின் படி பல்கலைகழக பாட விதானத்தில் மாற்றங்கள் செய்வதுடன் பல புதிய கற்கைநெறிகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

சுயதொழிலில் மாணவர்களை ஊக்கப்படுத்தலும் மற்றும் தனியார் துறைகளில் அவர்களின் ஆற்றலை மேம்படுத்துதல் குறித்தும் ஆராயப்பட்டது: (க-3)

★ சித்தன்கேணியில்

எரிபொருள் விநியோகம் சீரில்லை பொது மக்கள் தரப்பில் அதிருப்தி

(ஈச்சமோட்டை)

சித்தன்கேணி எரிபொருள் நிலையத்தின், எரிபொருள் விநியோகச் செயற்பாடுகள் சீரில்லை என பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

ஏனையபல இடங்களிலும் பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுவருகின்றபோதிலும், சித்தன்கேணி எரிபொருள் நிலையச்செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை.

இதனையடுத்து எரிபொருட் பாவனையாளர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம், பாதிக்கப்பட்ட பொதுமக்களால் எடுத்துரைக்கப்பட்டபோது இதுவரையில் சாதகமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லைஎனவும் பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம், சித்தன்கேணிப் பகுதிகளில் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 50 ரூபா வரையில் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது: (உ)

பத்திரங்கள் விநியோகம்

(இணுவில்)

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து இணுவில்J/188,J/191,J/194,ஆகிய கிராமசேவையாளர் பிரிவில் பதிவு செய்துள்ள குடும்பங்களிற்கு பாய்,சமையல் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இவற்றினை எதிர்வரும் திங்கள்,செவ்வாய்கிழமைகளில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

[க-49]

பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை சாரதா சேவாசிரமத்தின் சார்பில் இடம் பெயர்ந்து வடமராட்சியில் இயங்கும் சாவகச்சேரி இந்துமகளிர்கல்லூரி மாணவிகளுக்கு நாளை பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

15 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை சென்மராட்சி கல்வி வலய பணிப்பாளர் வி. செல்வராஜா மாணவிகளுக்கு வழங்குவார்.

மாங்குளத்தில் மூன்று சிறுவர் படுகாயம்

(வவுனியா)

மாங்குளத்தின் பணங்காமம் ஒலுமடுப் பகுதிகளில் காணிகளைத் துப்பரவு செய்து குப்பைகளை எரித்த வேளை குப்பைக்குள் கிடந்த "வெடிப் பொருட்கள்" வெடித்ததில் மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்:

பனங்காமம் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தின் போது கிருஸ்ணசாமி ஜீவகன் (வயது 10) என்ற சிறுவனும், ஒலுமடுப் பகுதியில் இடம் பெற்ற சம்பவத்தின் போது ஜெகநாதன் புண்ணியமூர்த்தி (வயது 14) அவரது சகோதரி ஆகியோர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது: (ந-4)

எழுவைதீவில் படகு பவுஸர் மூலம் குடிநீர் விநியோகிக்க ஏற்பாடு

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர்த்தட்டுப்பாட்டினை சீராக்கும்முகமாக படகுபவுஸர் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது.

மேற்படி தீவில் 570 மக்கள் வசிக்கின்றார்கள் ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் குடிநீர் அருகிப் போவதனால் இக்காலப் பகுதியில் ஊர்காவற்றுறையில் இருந்து படகு பவுஸர் மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்து படகு பவுஸர் மூலம் கொண்டு செல்லப்படும் குடிநீர் எழுவைதீவில் புதிதாக அமைக்கப்படும் நீர்த்தாங்கியில் தேக்கி வைக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது:

எழுவைதீவு புனித தோமையப்பர் ஆலய வளவினுள் நீர்த்தாங்கி அமைக்கப்படுகிறது.

மேற்படி வேலைத்திட்டத்திற்கான நிதி உதவியினை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (யு.என்.எச்.சீ.ஆர்) வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது: (க-75)

குறிகட்டுவான் - நயினாதீவுக்கு விரைவில் புதிய படகுச்சேவை

75, இலட்சம் நிதி ஒதுக்கீடு

[யாழ்ப்பாணம்]

குறிகட்டுவான் நயினாதீவு பயணிகளின் வசதி கருதி நூறு இருக்கைகள் கொண்ட படகு ஒன்றை வேலணை பிரதேசசபை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்படகுச் சேவைக்காக வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை 75 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது:

குமுதினி பயணிகள் படகு திருத்தவேலையில் இருப்பதால் பயணிகள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்தே இப்படகு வசதி கிடைக்கவுள்ளதாக வேலணை பிரதேச சபைத்தலைவர் என்.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார். [வ - 12]

ஈச்சமோட்டையில் தொடரும் திருட்டு பொது மக்கள் பெரும் விசனம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையின் முதலாம் ஒழுங்கைப் பகுதியில் உள்ள என்.எட்வேட் என்பவரது வீட்டினுள் திருடர் தமதுகைவரிசையைக் காட்டியுள்ளனர்.

அண்மைக்காலமாக நிலவும் அசாதாரண சூழ்நிலையால்இப்பகுதியிலுள்ளமக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் இதனையடுத்து திருடர் கைவரிசை அதிகரித்துவருகின்றது.

சம்பவதினமான கடந்த வியாழனன்று வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட்டுக் கதவுகளை உடைத்து உட்புகுந்து சகல பொருட்கள் மீதும் சோதனை நடத்தியுள்ளனர் அத்துடன் அங்கிருந்த பெறுமதிவாய்ந்த சமையல் பொருட்களையும் மற்றும் சில வீட்டு உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் சென்றமாதப் பகுதியில் துணிகரமாக நடைபெற்று வந்ததும் பின் ஊர்மக்கள் விழிப்புணர்ச்சியடைந்ததும் குறைவடைந்திருந்தது.

ஆனால் தற்போது மீண்டும் திருடரின் கைவங்குவதால் இடம்பெயர்ந்துவாழும் இப்பகுதி வீட்டு உரிமையாளாகள் பெரும் கவலையடைந்துள்ளனர். (க-59)

வன்னியில் தொடரும் வெப்பம் நீர் நிலைகள் வற்றி விட்டன

வன்னியில் நிலவும் உயர் வெப்பநிலை காரணமாகநீர் நிலைகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதாக வன்னிச்செய்திகள் தெரிவித்துள்ளன.

இதனால் இரணமடுகுளத்தின் நீர்மட்டம் 22அடி 3அங்குலமாகவும், கல்மடுகுளத்தின் நீர்மட்டம் 13அடி 7அங்குலமாகவும் குறைவடைந்துள்ளது அத்துடன் வேறு குளங்களின் நிலையும் இவ்வாறே காணப்படுகிறது.

இதன்காரணமாக பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், பாரியளவில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் கடும் வெப்பத்தினால் தொற்றுநோய்கள் பல பரவும் நிலையும் அங்கு தோன்றியுள்ளதாக தெரியவருகிறது. [உ]

கொழும்பு பாதுகாப்பு வலயத்தில் மீன்பிடிப்பதற்கான தடை நீக்கம்

(கொழும்பு)

கொழும்பு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

கடந்தகாலங்களில் மேற்படி பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டதில் இருந்து மீனவர்களுக்கு அப்பகுதிகளில் உட்பிரவேசித்து மீன்பிடிக்கத்தடை விதிக்கப்பட்டிருந்தது:

இதனையெதிர்த்து அண்மையில் ஆயிரம் மீனவர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை நடாத்தியிருந்தனர்.

இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அமைச்சர் ராஜபக்ஸ தலைமையில் நடாத்தப்பட்டகூட்டத்திலேயே மேற்படி முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது:

எனினும்,காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டிப் பகுதிகளில் மீன்பிடிப்பதற்கான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காலை 6மணி தொடக்கம்மாலை 5.30மணி வரையுமே மீனவர்கள் அக்கடற் பகுதிக்குள் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது:

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு மீனவர்களது வள்ளங்களுக்கு இலக்கங்கள் இடப்படவிருப்பதோடு. உரிய அதிகாரிகளிடம் அடையாள அட்டை மற்றும்பரிசோதனைகள் முடிந்தபின்னரேகடலில் நுழைய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

நிவாரணத்தின் போது

சிவப்பு பருப்பிற்கு பதிலாக மஞ்சள் பருப்பு வழங்க நடவடிக்கை

அரச- அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிவாரணத்தின் போது சிவப்பு பருப்பிற்கு பதிலாக மஞ்சள் பருப்பு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்

யாழ் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரச சார்பற்ற நிறுவன இணைப்பு அங்கத்தவர்களுடனான கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்கப்படவில்லை என காட்டப்பட்டதற்கு அரச அதிபர் தெளிவானவிளக்கமளித்தார்.

நிவாரணம் வழங்கும் போது, சில இடங்களில் பல குடும்பங்கள் இருமுறை நிவாரணம் பெற்றமை சுட்டிக் காட்டப்பட்டது,

இவற்றை நிவர்த்தி செய்வதில் பல சிரமங்கள்-போர் கால சூழ்நிலையில் இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார், ஹைலண்ட் பால் மாவிற்கு பதிலாக நெஸ்பிறே வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்;

கொழும்பில் சீனி மொத்த வியாபார விலை 28.50 சதமாக உயர்ந்துள்ளதாகவும், இதனால் சீனி விலையில் அடிக்கடி மற்றம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போஷாக்கு உணவான திரிபோஷா கொழும்பில் இருந்து கொண்டுவருவது பற்றியும் மேற்படி கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (க)

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களுள் முதன்மையானவர் அமரர் நாவேந்தன்

ஈழத்தின் மூத்த சிறுகதை எழுத்தாளர்களில் நாவேந்தன் முதன்மையானவர். அவருடைய சிறுகதைகள் மக்களது சமூக உறவுகள் சார்ந்த யதார்த்த படைப்புகளாகும்.

பிரபல எழுத்தாளரும், யாழ். மாநகர முன்னாள் பிரதிமேயருமான தம்பிராசா திருநாவுக்கரசு (நாவேந்தன்) அவரின்மறைவைஒட்டி யாழ். இலக்கிய வட்டத்தினர் விடுத்த அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது 1948களில் இருந்து தொடர்ந்து அவர் எழுதிய சிறுகதைகள் வாழ்வு,தெய்வமகன் என்னும் சிறுகதைத் தொகுதிகளாக வெளிவந்தது. அவருடைய புனைகதை ஆற்றல்களை இச் சிறுகதை தொகுதிகள் இன்றும் இனம் காட்டுகின்றன.

நாவேந்தன் சிறுகதை ஆசிரியராக மட்டுமன்றி சிறந்த பேச்சாளர்களில் ஒருவராகவும், பல்துறை சார்ந்த கட்டுரைகள் படைக்கும் ஆற்றல் வாய்ந்தவராகவும் விளங்கியுள்ளார். அவருடைய சடுதியான மறைவுஈழத்துஇலக்கிய உலகிற்கு பெரும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகுமென யாழ். இலக்கியவட்டம் கருதுகிறது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது: (க)

அச்சுவேலி மாணவன் றகித் இராணுவத்தினரால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அச்சுவேலியை சேர்ந்த குணரட்ணம் றகித் (வயது-20) அண்மையில் விடுவிக்கப்பட்டார்.

பிரஸ்தாப மாணவன் விடுதலையானது குறித்து பெற்றோர் மற்றும் உறவினர்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அறிவிப்பதில் அசமந்தப் போக்கை கடைப்பிடித்ததாக இணைப்பதிகாரி என். ஜீவேஸ்வரா குறைப்பட்டார்.

இதேவேளையில்.;

காங்கேசன் தடுப்புமுகாமில் புத்தூர் மேற்கு கிராம சேவகர் உட்பட ஐவர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

தங்கராஜா ஜரதீபன் (கொக்குவில்) சந்தக்குட்டி உதயராஜா (ஊர்காவற்றுறை) நவரட்ணம் ஆனந்தராஜா (கொடிகாமம்) சூசைப்பிள்ளை பாலேஸ்வரன் (குருநகர்) தற்போது இவர்சுளை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை ஏற்கனவே காங்கேசனில் தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்களில் ஆறு பேர் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ரட்ணசிங்கம் ரமேஸ், ராசையா தங்கராசா, நடராசாரஞ்சித்காந்தன், பசுபதி கனகரட்ணம்?பசுபதி நகுலேஸ்வரன், ரமையா மகேஸ்வரன், மேலும் மகேஸ்வரன் சகுந்தலாதேவி பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் தெரிவிக்கப்படுகின்றது; (க-12)

வலிகாமப் பாடசாலைகளில் நிலவும் இடநெருக்கடி தளபாட பற்றாக்குறை போக்க நடவடிக்கை

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் இடவசதி மற்றும் தளபாட வசதிகள் என்பன மிகவும் குறைவாக இருப்பதாகவும் இதனால் மாணவர்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தளபாடங்கள் கட்டடங்கள் நடுப்பாடு நிலவிய மேற்படி பாடசாலைகளில் யாழ். குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ் நிலைகளை அடுத்து இடம் பெயர்ந்த மாணவர்களும் இணைந்து கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதனாலேயே இந் நெருக்கடி நிலைமைதோன்றியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது;

இதேசமயம் இடவசதி, தளபாட வசதிகள் என்பன அற்ற நிலையில் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்ற இடம் பெயர்ந்த மாணவர்களது பெயர் விபரங்கள் பாடசாலை ரீதியாக திரட்டப்பட்டு வருகின்றன;

விடுமுறை காலமும் நெருங்குவதால் இக் காலங்களில் பாடசாலைகளில் நிலவும் மேற்படி குறைபாடுகள் நீக்கப்பட்டு விடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

பக்தி பூர்வமான முறையில் நல்லை உற்சவம் அமையவேண்டும்

வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அமைதியான, பக்திபூர்வமான சூழ் நிலையில் இம்முறை நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை கொண்டாட வேண்டுமென வைத்தியக் கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ். மாநகரசபையில் நடைபெற்ற நல்லூர் உற்சவகால ஏற்பாடுகள் குறித்த கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

பதில் ஆணையாளர் சி.மாநகரசபையில் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இலங்கை மின்சார சபையைச் சேர்ந்தகுகதாசன், சாரணர் பிரிவைச் சேர்ந்த சு. ஏகாம்பரநாதன் யாழ்மாவட்ட இந்து இளைஞர் பேரவையைச் சேர்ந்த இ. தவகோபால், பரியோவான் முதலுதவிப்படையைச் சேர்ந்த மாவட்ட ஆணையாளர் செல்வரஞ்சன் பிரிவு உத்தியோகஸ்தர் க. பிரசாந்தன், மக்கள் நலன்புரிச்சங்கத்தைச் சேர்ந்த பஞ்சித குமார் இலங்கை செஞ்சிலுவைச் சங்க சி. கணேசன், வடபிராந்திய போக்குவரத்து சபையை சேர்ந்த வி.எஸ். சொக்கலிங்கம் சைவத் கொண்டார் நிலையத்தை சேர்ந்த சி. பாலசூரியா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் கடந்த வருடத்தைப் போன்றே அதிகாலை 4.30 மணிதொடக்கம் மாலை 7.30 மணிவரை மின்சாரம் வழங்குவதென்றும் ஜி.ரி.சற் அமைப்பினரால் நீர் விநியோகப்பணிகள் மேற்கொள்ளப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உற்சவகாலத்தில் தடைசெய்யப்பட்ட வீதியில் நடமாடுவதற்குரிய பாஸ் நடைமுறை இம்முறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்றும் வீதித்தடைகள் கோவிலைச் சுற்றி அமைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது

பருத்தித்துறையால் வருபவர்களுக்கு செட்டியார் வீதி சந்திக்குமிடத்திலும், கோவில் வீதியால் வருபவர்கள் பருத்தித்துறை வீதி கோவில் வீதியுடன் இணையுமிடத்திலும் அரசடி வீதியால் வருபவர்கள் நல்லை குமரனுக்கு அருகிலும் நிறுத்தப்படுவர்.

இந்த நடைமுறை தொடர்ந்து பத்து நாட்கள் நடைமுறையில் இருக்குமென்றும் அதன்பின்னர் இத்தடைத் தூரம் விஸ்தரிக்கப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் வீதித்தடையுள்ள பகுதிகளில் நடைபாதை வியாபாரம் முற்றாகத் தடுக்கப்படுமென்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடைத் தொகுதிகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடங்களிலேயே நிறுவப்படுமென்றும் மற்றும் சைக்கிள் மோட்டார் சைக்கிள், கார் ஆகிவற்றுக்கான பாதுகாப்பு கட்டணங்கள் முறையே ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐந்து ரூபா வாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதே வேளை கடந்த வருடத்தைப் போன்று இம்முறை யும்பஸ்மற்றும்மினிபஸ் சாரதிகளுக்கிடையில்ஏற்படும்சச்சரவுகளை தடுப்பதற்காக அவர்களுக்குரிய புதிய தரிப்பிட ஒழுங்குகள் குறித்து இம் மாதம் உற்சவம் தொடர்பாக யாழ் மாநகரசபையினர் 28ம் திகதிநடைபெறும் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது. [க-8]

அன்பும் பண்பும் உள்ள இவர்கள் தேசத் தலைவராகவும் விளங்குவர்

எண் 8 (சனி)

எண் 8 ஐப் பிறப்பெண்ணாகக் கொண்டவர்கள் சனி கிரகத்தினால் ஆளப்படுகின்றார்கள். இவ்வெண்ணானது ஆங்கில மாதத்தில் வரும் 8,17,26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களைக் குறிக்கும்.

இவ்வெண்ணின் பொதுவான குணங்கள்

பொதுவாக எண் 8 ஐச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் ஏகாந்த மனப்போக்குக் கொண்டவர்களாகவும், நெறிதவறிய சிந்தனைகளையும், சந்தேகங்களையும் மனதில் கொண்டவர்களாகவும் காணப்படுவர்.

வெளியில் இருந்து பார்ப்பவர்களிற்கு இவர்கள் ஈவு, இரக்கம் அற்ற குணத்தினராக தோற்றமளிப்பர்.

எனினும் மனதில் அன்பு நிறைந்தவர்கள். தெய்வநம்பிக்கையுடன், காணப்படும் இவர்கள் தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவே காணப்படுவர்.

இவ்வெண்ணினர் எந்த நேரமும் யோசனையில் மூழ்கியிருப்பர். மனதில் உற்சாகம் குறைந்தவர்கள். எந்த முயற்சியிலும் ஈடுபடாமல் தயங்கியபடியே இருப்பர். தனிமையில் இருந்து தனது

(சோதிட பலன்)

வாழ்க்கையை பிறரது வாழ்க்கையுடன் ஒப்பிட்டுக் கலங்கியபடியே இருப்பர்.

இவ் எண்ணைச் சேர்ந்த சிலருக்கு வாழ்க்கையில் துன்பங்களும், எதிர்ப்புக்களும் ஏமாற்றங்களும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். இவர்களில் சிலர் வாழ்க்கையில் வெறுப்படைந்து தம்மைப் பொதுச் சேவைக்கு அர்ப்பணித்து மனத்திருப்தியுடன் வாழ்வர்.

இந்த எண் விசித்திரமானது. இந்த எண்காரர் வாழ்வில் பெருவெற்றியோ அல்லது முழுத்தோல்வியோ ஏற்படும் நிலை உண்டு. இவர்கள் மற்றவர்களை நம்பித் தான் ஏமாற்றம் அடைகின்றனர்.

இந்த எண்ணினரில் பலர் துர் அதிஷ்டம், கெடுகாலம் விதித்திராமான விதி என்றெல்லாம் சொல்லிபடி வாழ்க்கையில் ஓயாமல் போராடிக் கொண்டிருப்பார்கள். சகலவிதமான வசதிகள் இருந்தாலும் இவர்களுடைய உள்ளுணர்வு அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை.

இவர்களில் பெரும்பாலானவர்கள் எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாதவர்கள் போலவும், மற்றவர்களிடமிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் போலவும் நினைத்து தம்மை வருத்திக் கொள்வார்கள்.

இவ் எண்ணின் ஆதிக்கம் கூடியவர்கள் சாந்த சொரூபிகளாகவும், கருணை உள்ளம் கொண்டவர்களாகவும்பிறர், துன்பம் கண்டு சகியாதவர்களாகவும், அநீதிக்கெதிராக குரல் கொடுப்பவர்களாகவும், புகழ் பெற்றவர்களாகவும் விளங்குவர்.

இவ் எண்ணின் ஆதிக்கம் குறைந்தவர்கள் எண்ணத்தில் தூய்மை அற்றவர்களாகவும், குறுக்குவழியில் பணம் சம்பாதிப்பவர்களாகவும், பேராசை கொண்டவர்களாகவு காணப்படுவர்.

இவ்வெண்காரரின் தொழில்நிலை

இந்த எண்ணினர் உலகம் வணங்கும் அருளாளர்களாகவும், தியாகிகளாகவும், சேதத் தலைவர்களாகவும், அரசியல் பிரமுகர்களாகவும், அறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும், அமைச்சர்களாகவும், பேராசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும் விளங்குவார்கள்.

இவர்களிற்கு பஸ், லொறி போன்ற வாகனங்களாலும், இரசாயன பொருள் எண்ணைப் பொருள் விற்பனையாலும், இரும்பு தொடர்பான வியாபாரத்திலும் இலாபம் கிடைக்க வாய்ப்புண்டு. துணி, பீடி, சிகரெட், புகையிலை வியாபாரமும் இவர்களிற்கு உகந்தது.

இவ்வெண்காரரின் மணநிலை

பொதுவாக எண் 8 ஐச் சேர்ந்தவர்களிற்கு மண வாழ்க்கை சிறப்பானதாக இருக்கமாட்டாது எனினும் இந்த எண்ணினரில் பண்பு நிறைந்த ஆண்கள் மனைவியருடன் அன்புடன் பழகி, மகிழ்ச்சியுடன் வாழ்வர்.

சுஜாஸ்

அவ்வாறே எண் 8 ஐச் சேர்ந்த பெண்களும் அன்பும் பண்பும் உள்ளவர்களானால் கணவர்களுக்கு கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்துவர். அவ்வாறில்லாதவர்கள் கணவரை அலட்சிபம் செய்து வாழ்க்கையைப் பயனற்றதாக்கி விடுவார்கள்.

இவ்வெண்காரரின் நோய்நிலை

இவ்வெண்காரர் பித்த தேகம் உடையவர்கள். இவர்களில் பலருக்கு தலைபிடி, காது இரைச்சல், இரத்தத்தில் விஷசேர்க்கை, வாய்வுப் பிடிப்பு, அதிக பித்த நீர் சுரப்பு, குடல் பலவீனம் போன்ற கோளாறுகள் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைகழகம் இலங்கை

பல்கலைக் கழக அனுமதி கல்வியாண்டு 2000 / 2001

கல்வியாண்டு 2000/2001க்குரிய பல்கலைக் கழக அனுமதி பெற்றோரின் பெயர்ப்பட்டியல் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால்யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது அனுமதி பெற்றோரின் பெயர்ப் பட்டியலை அனைத்து பீடங்களின் அறிவித்தல் பலகைகளில் பார்வையிடலாம்.

பல்கலைக்கழக அனுமதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறியமையால் முழுமையாகத் தீர்மானிக்கப்படாத அனுமதி பெற்றோரின் 41 மாணவர்களின் பெயர்ப்பட்டியலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 41 மாணவர்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு, சமர்ப்பிக்கத் தவறிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பதிவு செய்வதற்கு வேண்டிய அனுமதிக் கடிதத்தை பெற்று பதிவை மேற்கொள்ளவும்.

அனுமதி பெற்ற சகல மாணவர்களுக்கும் அனுமதி விண்ணப்பப்படிவம் தனித்தனித் தபாலில் அனுப்பி வைக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யாத மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்பி வைக்குமாறு பணித்துள்ளது. எனவே சகல மாணவர்களையும் 2000-08-25 ஆம் திகதிக்கு முன்னராக பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்.

பதிவாளர்

(கி-654)

யாழ். நகரில் றம்புட்டான் விற்பனை வெகு மும்முரம்; ஒன்று ஆறுரூபாவாம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலத்தின் பின்னர் யாழ். குடாநாட்டிற்கு "றம்புட்டான்" பழம் கொண்டுவரப்பட்டது ஒருபழம் 6 ரூபாவாகவிற்கப்பட்டது.

திருகோணமலையில் இருந்து பதுக்கித்துறை வந்த சிற்றஒவ் றிங்கோகப்லில் ஆயிரத்து இருநூறுபழங்கள் மட்டுமே கொண்டுவரப்பட்டன. இப்பழங்களை மக்கள் முண்டியடித்து யாழ் பஸ் நிலையப்பகுதியில் வாங்கியதைக் காணமுடிந்தது. [க-12]

ஆரம்பக்கல்வி ஆசிரியரிடையே சிறுகதைப்போட்டி

(கோப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பக்கல்வி பிரிவினரால் ஆசிரியர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்குடன் சிறுகதைப்போட்டி நடாத்தப் படவுள்ளது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடையே நடாத்தப்பட வுள்ள இப் போட்டியில் பங்குபற்றும் ஆசிரியர்கள் சிறுவர் கதைகளை எழுதி அந்தந்த வலயத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் 5 சிறுகதைகள் மாகாணசபையின் ஆரம்பக் கல்விப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிய வருகிறது; (உ-79)

புளொட்டினால் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

புளொட் அமைப்பினரால் கடந்த வியாழன் முதல் அனுஸ்டிக்கப்பட்டு வரும் வீரமக்கள் தினத்தையொட்டி நேற்று முன்தினம் யாழ். கோட்டை முனியப்பர் கோவிலைச்சூழஉள்ளபகுதிகளில்சிரமதானம்மூலம்துப்பரவாக்கப்பட்டது.

நேற்றுக் காலை யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்தானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது; (ந-3)

உலக தரிசனம்

குளோனிங் முறையில் பசுமாடு

(ரோக்கியோ)

செயற்கை விஞ்ஞான ரீதியில் குளோனிங் முறையில் ஜப்பானிய விஞ்ஞானிகள் அண்மையில் பசு மாடொன்றினை உருவாக்கியுள்ளனர்.

ஏற்கனவே ஆடு, பன்றி போன்ற மிருகங்களை குளோனிங் முறைமூலம் வெளிநாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கியிருப்பது தெரிந்ததே. (உ)

பிரான்ஸிய புரட்சியை நினைவுகூரும் முகமாக

கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட 'பாஸ்ரல்' சிறை உடைப்புவைபவம்

ஆயிரம் கிலோ மீற்றருக்கு மேசை போடப்பட்டதாம்

[பாரிஸ்]

பிரான்ஸ் புரட்சியை ஆண்டு தோறும் கொண்டாடும் தினமான பாஸ்ரல் தினத்தைநேற்றுமுன்தினம்பிரெஞ்சு மக்கள் ஒரு பெரும் கொண்டாட்டமாகக் கொண்டாடினார்கள்.

பிரான்சின் வடகோடி நகரான டங்கன்முனையிலிருந்து மறு எல்லை நகர்வரை ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கு நீண்ட மேசைகள் போடப்பட்டு ஓர் உல்லாச விழாப்போல உண்டு குடித்து மகிழ்ந்து கொண்டாடினார்கள்.

பரீஸ் நகரத்துக்கூடாகப் போகும் இந்த நீண்டமேசையில் சுமார் 4 மில்லியன் மக்கள் உண்டு களித்திருந்தார்களென்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ் விழாவிற்கு நாட்டின் அனைத்து நகர பிதாக்களும் அழைக்கப்பட்டு பிரான்ஸ் தலைவரால் கௌரவிக்கப்பட்டார்கள்.

இவ்விழாவில் வழமைபோல் இராணுவ அணிவகுப்பு இடம்பெற்றதுடன் புத்தாயிரம் ஆண்டின் சிறப்புவிழாவாகக் கொண்டாடப்பட்டது. (து)

சிங்கப்பூரின் பொருளியல் வளர்ச்சி பல்கலைக்கழகங்களில் தங்கியுள்ளது

சிங்கப்பூர் துணைப் பிரதமர் ரொனிற்றா பல்கலைக் கழகங்கள் ஆக்கபூர்வமாகச் செயலாற்றி சிங்கப்பூரின் பொருளியல் வளர்ச்சியைத் தூண்ட வேண்டும் என்று தொடர்ந்து குறிப்பிடுகையில்; தமது குடியரசு அறிவு சார்ந்த புலமைக்கு மாறிக் கொண்டிருப்பதால் அந்தப் பணி மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார். [க-து]

அயல்நாடுகளின் இறைமையை சீர்குலைக்க பாகிஸ்தான் முயற்சி

அமெரிக்கா குற்றச்சாட்டு

[வாஷிங்டன்]

இந்தியா உட்பட பல அயல் நாடுகளின் உள் விவகாரங்களில், இஸ்லாமிய அடிப்படைவாத ஆயுதக்குழுக்கள் மூலம் மிகப்பெரும் பிரச்சினைகளை பாகிஸ்தான் அரசு ஏற்படுத்தி வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

மேற்படி செயல்களுக்காக பாகிஸ்தான் அரசு தனது பொருளாதாரத்தில் பெரும் தொகையினைச் செலவிட்டு வருவதுடன், தனது நாட்டு உள்விவகாரங்களில் உறுதியின்மையினையும் பெரும் குழப்பங்களையும் எதிர்நோக்கி வருகிறது எனவும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியா, ஆப்கானிஸ்தான் நாடுகளின் ஆட்சிக் கவிழ்ப்பு மற்றும் மேற்படி நாடுகளின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் முயற்சிகளிலும் பாகிஸ்தான் வேகமாக ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறான செயல்களின் ஒருபகுதியாகவே கார்கில் பகுதியில் இடம்பெற்ற போர் அமைவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (உ)

எய்ட்ஸ் நோயாளிகளை மனிதாபிமானத்துடன் அணுகுங்கள்

நெல்சன் மண்டேலா வேண்டுகோள்

(டர்பன்)

'எய்ட்ஸ்' நோயால் பீடிக்கப்பட்டவர்களை கறை படிந்த கண்ணால் பார்க்க வேண்டாம். மனிதாபிமானத்துடன் அவர்களை அணுக வேண்டும் என தென்ஆபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார்.

எயிட்ஸ் தொடர்பான சர்வதேச மகாநாட்டை முடித்து வைத்து பேசுகின்ற போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் வாதிகளும், விஞ்ஞானிகளும் எய்ட்ஸ் உருவாக்கம் தொடர்பான வாதப்பிரதிவாதங்களை விட்டு எய்ட்ஸ் நோயால் இறப்பவர்கள் அந்நோய்க்குள்ளாகியவர்களின் நடவடிக்கைகளிலும் செயல்களிலும் என்ன செய்யவேண்டும் என்பதைச் செய்யும்படி கேட்டிருக்கின்றார்.

டர்பன் நகரில் கூடியிருந்த பிரதிநிதிகளிடம் எய்ட்ஸை தடுப்பதற்கு என்ன உதவிகளோ அவற்றிற்குத்தான் முன்னுரிமைகள் கொடுக்க வேண்டும் என்றார். (க-து)

தாய்வான் சீனாவின் ஒரு மாநிலமே ஐ.நா.வில் சேரும் தகுதி கிடையாது

சீனசெய்திதுறை அமைச்சர் தெரிவிப்பு

(பீஜிங்)

தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் மட்டுமே ஐ.நாவில் சேரும் தகுதி அதற்கு அறவே இல்லை என்று சீனாவின் செய்தித் தொடர்பு அமைச்சர் கூறினார்.

ஒரு சீனா என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வளர்ந்தால்தான் தாய்வான் பொருளாதாரத்திலும் மற்றத்துறைகளிலும் முன்னேறும் என்றும் அதேவேளை இப்பிராந்தியத்தில் அமைதி நிலவுமென்றும் அவர் மேலும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை தாய்வானின் நிறுவனங்களுடனும் கட்சிகளுடனும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு கூட்டாக முயற்சி செய்ய சீனப் பெருநிலப்பரப்பு விரும்புவதாகவும் மேலும் தெரிவித்தார். (து)

ஜம்மு காஷ்மீரில் தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்ற சுதந்திரக்கட்சி தலைவர் கைது

[புதுடில்லி]

ஜம்முகாஷ்மீர் மாநில ஜனநாயக சுதந்திரக்கட்சித் தலைவர் சமேஷா அகமது பாஷா மற்றும் அவரது ஆதரவாளர்கள் 25 பேரும் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1935ம் ஆண்டு காஷ்மீர் பகுதியில் இந்து மன்னரை எதிர்த்துப் போராடுகையில் 35 முஸ்லிம்; படுகொலை செய்யப்பட்டனர்;

அவர்களின் நினைவாக நேற்று முன்தினம் சமேஷா தலைமையில் ஊர்வலம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இவ் ஊர்வலத்திற்கு பொலிஸார் தரப்பில் இருந்து அனுமதி வழங்கப்படவில்லை இதனையும் மீறி சமேஷா அகமதுபாஷா மற்றும் அவரது 25 ஆதரவாளர்களும் முயன்றபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்; [உ]

சீனதலைமை அமைச்சர் திரும்பினார்

(பீஜிங்)

சீன தலைமை அமைச்சர் சூசௌங்சி பல்கேரியா ஜேர்மனி, நெதர்லாந்து இத்தாலி பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றிற்கும் அரசமுறைப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு பீஜிங் வந்து சேர்ந்தார்.

புரிந்துணர்வை பெருக்குவது ஒத்த கருத்துகளை வரவேற்பது பரஸ்பர உணர்வை வளர்ப்பது ஆகிய நோக்கங்களை தமதுபயணம் நிறைவேற்றியுள்ளது என்று கூறினார்; (து)

ஸ்ரீலங்கா அரசின் ஒற்றராக ஜெயலலிதா செயல்படுகிறாரா?

அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன்

(புதுடில்லி)

அ.தி.மு.க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் ஈழத்தமிழர் தொடர்பான அண்மைக்கால நடவடிக்கைகள் மற்றும் இது தொடர்பாக அவர் விடும் அறிக்கையில் அவரை ஸ்ரீலங்கா அரசின் ஒற்றராக இருப்பாரோ எனச் சந்தேகங்கொள்ள வைக்கிறது என மத்திய புடவைத் துறை இணை அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஆதரவாளர்களைக் கண்டித்து அண்மையில் ஜெயலலிதா வெளியிட்ட ஆறுபக்க அறிக்கை குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே செஞ்சி இராமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து அண்மைக்காலம் வரை மௌனம் சாதித்து வந்த ஜெயலலிதா, இலங்கைக்கான இந்தியத் தூதரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியபின் வெளியிட்ட அறிக்கையில்,

கருணாநிதியின் ஆட்சி தொடர்ந்தால் விடுதலைப் புலிகளின் தளமாக இந்தியா மாறிவிடும் அபாயம் உள்ளது.

இந்த நிலையைத் தடுக்க மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க, ம.தி.மு.க, பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றை தேசிய முன்னணியில் இருந்தும் வெளியேற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இது எமக்கு ஆச்சரியத்தினை ஏற்படுத்தவில்லை மாறாக அவரது உள்நாக்குமுறலாகவும், மக்கள் ஆதரவு குறைந்ததனால் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடாக இருக்கலாம் எனவும் கருதுகிறோம்.

மேலும், இவரது கூற்று இலங்கை அரசின் ஒற்றராக இருப்பவரோ என்ற சந்தேகத்தினையும் தமிழகத்தில் தோற்றுவித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (உ)

ஈழத்தமிழ் பெண் குமுதினி

கொலைச் சம்பவம் குறித்த விசாரணை உடன் நடாத்தப்பட வேண்டும்

பிரதமர் வாஜ்பாயிடம் கோரிக்கை

(புதுடில்லி)

கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்து அகதியாக இந்தியா சென்ற வேளை கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் தமிழக கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்ட இளம் பெண் குமுதினி விடயத்தில் உடன் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என தமிழகத்தில் வாழும் ஈழத்தமிழர் கோரிக்கை விடுத்துள்ளனர்;

இதுதொடர்பான முறைப்பாட்டுக் கோரிக்கைகளை இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் தமிழக முதல்வர் கருணாநிதி ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளையில் மேற்படி விடயம் தொடர்பாக உடன் நீதி விசாரணை நடத்தக் கோரியும் சம்பந்தப்பட்ட குற்ற நபர்களை கைதுசெய்யக் கோரியும் மதுரை மாவட்ட கூடல்நகர், உச்சிப்பட்டி அணையூர் பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் உள்ள ஈழத்தமிழர் வீடுகள் தோறும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டுள்ளனர்; (உ)

இந்தோனேசிய அதிபர் விரைவில் இராஜினாமா

(ஜக்கார்த்தா)

இந்தோனேசிய அதிபர் அப்துல்ரகுமான் கூடியவிரைவில் தனது பதவியை இராஜினாமாசெய்யவுள்ளதாகமூத்த அரசியல் வாதிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலின் போது அமோகவாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட இவரது ஆட்சி தற்போது மிகப்பலம் குன்றிக்காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நடைபெறவிருக்கும் தேர்தலில் தான் மீண்டும் போட்டியிடப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [க-து]

காஷ்மீர் முதல்வர் புதுடில்லிபயணம்

(புதுடில்லி)

ஜம்மூகாஷ்மீர் முதல்வர் பாரூக் அப்துல்லா நாளை புதுடில்லி சென்று பிரதமர் வாஜ்பாயைசந்தித்து ஜம்மூ காஷ்மீர் சுயாட்சி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவார்; (உ)

செய்திப்பரல்

★ ஜம்மு காஷ்மீரில் புத்த பிக்குகள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

★ ஆபிரிக்க ஒன்றியம் உருவாக்கப்பட இருப்பதாகவும் இது ஐரோப்பிய ஒன்றியம் போல் செயற்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

★ கிங்கப்பூரில் புதிய பத்திரிகை இலவசமாக வெளிவர இருக்கிறது. இப்பத்திரிகையை 20 நிமிடத்தில் வாசித்து முடிக்கலாம் என்று சொல்லப் படுகிறது.

★ வட்டார வளர்ச்சிக்கு சீன-அமெரிக்க உறவு அவசியம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கூறினார்.

★ பாகிஸ்தானில் புரட்சிக் குழுவே தென்இந்திய விமான விபத்துக்குக் காரணம் என்று இந்திய அரசு தெரிவிப்பு. [து]

தொடர்ந்து உலகதரிசனத்தைப் படியுங்கள் போட்டி யொன்று உங்களுக் காகக் காத்திருக்கிறது.

வகையறிந்து நற்செய்து தற்காப்பமாயும் பகைவர் கண்பட்ட செருக்கு

- குறள்

வலம்புரி

மனம் திறந்து

எல்லோரது வாயிலும் பட்டுத் தெறிப்பது இனப் பிரச்சினை என்ற சொல் லாகும். இந்தச்சாபக்கேடு ஏறை நூற் றாண்டாக வளர்ந்து வருவது ஒன்று. இதனை ஆக்க பூர்வமான சிந்தனையோடு நிதனா மாகவும் நேர்மையாக வும் தீர்க்கப்படவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு.

எந்தப்பகக்ங்களில் நின் றாலும் இலட்சியம் ஒன் றாய் நின்றவர்கள் மனந் திறந்து பேசுகின்றகாலம் உதய மாகியிருக்கிறது. பாராளுமன்றஉறுப்பினர் சித்தார்த்தனின் புத்திபூர் வமான கூற்றும், ரவிரா ஜின் அணை துணையான உண்மைப்பாடும் அரசுக்கு மட்டுமல்ல, மூன் றாம் தரப்பு மத்தியஸ்தராக முனையும் அனைவர்க்குப் துலாம்பரப் படுத்தப்படு கின்றன.

தமிழர்களின்உயிர்நாடி எனக் கருதப் படுபவரும், உயிர் கொடைத் தியாகி களை மண்ணுக்கு ஈய்ந்த வரென்ற நிலையிலும்முக் கிய பங்காளியான பிரபா இல்லாத பிரச்சினைத் தீர்வு முற்றுப் பெறாது. தமிழர் தம் முட்டினைப் போக்கவும் மாட்டாது என்கின்ற உண்மை துலங் கத் தொடங்கி விட்டது.

ஒரே இலக்கை நோக் கிச் செல்பவர்கள் தம்முள் இருக்கும் பகைமை உணர்வை ஒரு பொருட் டாகக் கருதாது உண் மைக்கு, யதார்த்தநிலைக் குத் தலை வணங் கியே ஆக வேண்டும்,

விடியப்போகின்றநிலை யில், பகைமைகள் மடிந்து ஒன்றுபட்ட குரல் உரக்க ஒலிக்க வேண்டும். இன் றைக்குத் திருந்திய சிந் தனை என்றோ உதித்தி ருந்தால்....

உடைமைகளும் உயிர்க ளும் பெருமளவு பேணப் பட்டிருக்கலாம். பகைமை தலை தூக்கியிருக்காது. பகைவனுக்குசிம்ம சொற் பனமாய் தமிழன் இருந்தி ருப்பான்.

தமிழரின் ஆற்றலும் மேம்பாடும் இன்றைக்கு இமயம் போல் வளர்ந்து நிமிர்ந்து நிற்கும்.

கைப்புண்ணுக்கு கண் ணாடி தேடிய காலம் மறைந்து போகட்டும். மூலமூர்த்தி இல்லாமல் பரிவார மூர்த்திகளோடு வீதியுலாநடை பெறமாட் டாது. நடை பெறவும் கூடாது.

எங்கள் பிரச்சினைக்கு மருந்து ஒன்றுபட்ட குரல் ஒலியே. சம்பந்தப்பட்ட அனைவரதும் பங்க ளிப்பே வியர்வையை, உதி ரத்தை சிந்தி உழைத் தமைக்கு உரிய ஊதியம் கிடைக்க வேண்டும். அது நீதியும் கூட.

-அன்புடன் ஆசிரியர்

நல்லோர் போற்றும் நற்புத்திரர்கள் வாய்ப்பதற்கு அறிவியல் ரீதியான அணுகுமுறை அவசியம்

கே. விஜயராகவன்

உலக வாழ்க்கையில் இன் றியமையாத செல்வங்கள் பதினாறு என்று நம் முன் னோர் வகுத்திருக்கின்றனர். அந்தப் பதினாறு செல்வங் களையும் பெற்று நிறப்பாக வாழ வேண்டும் என்றுதான், 'பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க!' என்று மண மக்களை வாழ்த்துவது நம் மரபு.

அவற்றில் முதன்மையானது 'மக்கட் செல்வம்' எல்லா வசதிகளும் இருந்தாலும், மக்கட் செல்வம் இல்லாதவர் வறியவரே. பொதுவாக, ஒரு வரை நலம் விசாரிக்கும் போது, என்னப்பர் சௌக்கி யமா? கல்யாணம் ஆகி எத் தனை வருஷமாச்சு? குழந்தை கள் எத்தனை? என்றுதான் கேட்கிறோம்.

உங்களுக்கு எவ்வளவு சொத்து சேரும்? நிலம், நீச்சு உண்டா? என்றெல் லாம். யாரும் கேட்பதில்லை இதிலிருந்து குழந்தைகள் எவ் வளவு முக்கியம் என்பது தெரிகிறது.

மேலும் இறைவனின் கரு ணையால், நம் வினைப்பய னுக்கு ஏற்றவாறு குழந்தை கள் பிறப்பதும், குழந்தைப் பேறு இல்லாமல் தத்து எடுப் பதும் ஆகிய பலன்கள் நிகழ் கின்றன.

மனித ஆற்றலையும், முயற் சியையும் மீறியதாக இருப்ப தால், இதனை 'பாக்யம்' என்றனர். இந்த 'புத்திரபாக் யம்' ஒருவருக்கு ஏற்பட ஜாதக அமைப்பு எப்படி இருக்க வேண்டும்?

நல்ல குழந்தைகள் பிறக்க, இருக்க வேண்டிய அமைப்பு பிள்ளைகளால் அவமானம் ஏன் ஏற்படுகிறது? இள வய தில், அதிகம் தாமதம் இல் லாமல் குழந்தைகள் பிறக்க எப்படிப்பட்ட கிரக நிலை அமைய வேண்டும்? புத்திர தோஷம் என்றால் என்ன? அதற்கான பரிகாரம் என்ன? என்பது போன்ற கேள்வி களுக்கான விடையாக மலர் கிறது இந்தக் கட்டுரை.

ஜெனன காலத்தில் குழந் தைகளைப் பற்றி நமக்கு அறிவிக்கும் இடம் ஐந்தாவது வீடு இதை 'பூர்வ புண்ணிய' ஸ்தானம் என்கிறது ஜோதி டம் மேலும், புத்திர காரக னும் குரு ஜாதகத்தில் என் னநம் அமைந்திருக்கிறார்? என்பதையும், லக்னம் ஐந் தாமிடம் மற்றும் ஒன்பதா மிடம் ஆகிய இடங்களையும் வைத்து பலனை நிர்ணயிக்க வேண்டும்.

'கல்யாணமாகி ரொம்ப வருஷம் ஆச்சு, இன்னும் ஒரு புழு, பூச்சி கூட தங்கவில்லை என்ன கிரகச் சாரமோ?'- இப்படி அலுத்துக் கொள் பவர்களைப் பார்த்திருக் கிறோம். அப்படியே பிறந் தாலும், பிள்ளைகள் அடங் காதவர்களாக, தாய், தந் தையரை அலட்சியம் செய் தும், தந்தை தேடி வைத்த பொருளுக்கும், நல்ல பெய ருக்கும் களங்கம் உண்டாக்கு பவர்களாக இருப்பதையும் காணமுடிகிறது என்ன கார ணம்? அடிப்படையில் பாவி கள் எனப்படும், அங்காரகன் சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் ஐந்தாமிடத்திலும் ஒன்பதாமிடத்திலும், ஜெனன லக்னத்திலும் அமை யப் பெற்றும், அவர்கள் திசாபுத்தி நடக்க நேர்ந் தாலும் மேற் சென்ன துர்ப பலன்களே நிகழும்இத்தகைய அமைப்பையே, 'புத்திர தோஷம்' உள்ள ஜாதகம் என்கிறோம்.

'எப்பேர்ப்பட்ட குடும்பம் சார்? அவங்க தாத்தா, அப்பா காலத்திலிருந்து எனக்கு நல்லாத் தெரியும்! 'ஓகோ' னு வாழ்ந்தவங்க! ஊரிலையும்நல்ல பேரு உண்டு இந்தப் புள்ளையாண்டான் பெறந்ததுக்கு அப்புறம் எல் லாம் சீரழிஞ்சுப் போச்சு! ஒளுங்காப் படிக்காம, கண்ட படி திரிஞ்சு, அப்பன், முப் பாட்டன் சொத்தை எல்லாம் வித்தே தீத்துப்புட்டான்!'

இப்படியும் சில சமயம் கேட்க நேர்கிறது, காரணம் புத்திர ஸ்தானாதிபதியாக அமைந்த கிரகம் பலம் இழந்து விரயாதிபதி எனப் படும் பன்னிரண்டாம் வீட் டிற்கு அதிபதியுடன் சேர்ந்து காணப்பட்டால் மேற்படி துர்ப்பலன்கள் நிகழும் மேலும், புத்திரக் காரனா கிய குரு, பன்னிரண்டா மிடத்தின் அதிபதியுடன் கூடி னாலும், பன்னிரண்டா மிடத்துக்குடைய கிரகத்தால் பார்வை செய்யப்பட்டாலும் பெற்ற பிள்ளைகளால் பொருள் இழப்பு, நஷ்டம், அவமானம் ஆகிய அனுகூல மற்ற பலன்களே நிகழும்.

இவ்வாறே, ஜாதகத்தில் தனஸ்தானாதிபதியும், விரய ஸ்தானாதிபதியும் சேர்ந்து பூர்வ புண்ணிய மாகிய ஐந்தாம் பாவத்தில் இடம் பெற நேர்ந்து விட் டால், ஜாதகர் தன் பிள்ளை களால் பெரும் மனக்கவலை கள் அடைய நேரிடும்.

வளர்த்தகடா மார் பில் பாய்ந்த கதையாக, பெற்ற பிள்ளைகளே தகப்பனுக்கு வில்லர்களாக, மாறி, கோர்ட், கேஸ் என்று அலைக் கழிப்பது உண்டு இதற்குக் காரணம், புத்திர ஸ்தானா திபதியான ஐந்துக்குடைய கிரகம், குண, ரோக, சத் ருஸ்தானம் எனப்படும் லக் னத்துக்கு ஆறாவது இல்லத் தில் அமைய நேரிவதும், சில ஜாதகங்களில் பூர்வ புண்யா திபதி பலம் குன்றி தன் பகைவர்களோடு சேர்ந்து காணப்படுவதும், மேற்படி அசுப பலன்கள் ஏற்பட க் காரணம் ஆகின்றது. 'என் னய்யா இது ஓரேயடியாக பயமுறுத்துகிறீர்களே! நாட் டில் நல்ல பிள்ளைகளே இல் லயா?' என்று நீங்கள் கேட் பது என் காதில் விழுகிறது அவசரப் படாதீர்கள்! அடுத் ததாக அந்த விஷயத்துக்கு தான் வருகிறேன்.

''நல்லபுண்ணியம் செஞ்ச வருங்க! அதுதான் புள்ளைங்க ஒண்ணொண்ணும் முத்து முத்தா இருக்குது. அப்பன் ஆயியை என்னம்மா வாங்கு துங்க! அவுங்க பேச்சை மீறி ஒண்ணு செய்யறது இல்ல! புள்ளைங்க தலை எடுத்து சொந்தமாவீடு வாங்கி,க அவுங்களை சுகமாவச்சிக் காங்க! ம்! எல்லாத்துக்கும் குடுத்து வச்சிருக்கணும்!'' இப்படி புலம்புவர்கள இன் னும் பரவலாக உள்ளார்.

ஏன் இப்படி ஏற்படுகிறது? நன்றான ஐந்துக்குடையவன் ஐந்தாம் இல்லத்திலும், ஐந் தாமிடத்துக்கு ஐந்தாமிட மான ஒன்பதாமிடத்தின் அதி பதி ஒன்பதிலும் அமையும் அதிர்ஷ்டசாலிகளுக்கு பிள் ளைகளால் பொருள் வரவு, நன்மதிப்பு, புகழ், கௌர வம், வாழ்க்கையில் சுகம் போன்ற மேலான பலன்கள் ஏற்படும். மேற்படி அமைப் பில் புத்திர காரனான பிர கஸ்பதியும் ஒன்பதுக்குடைய வனும் இணைந்து இருக்க நேரிட்டால் கேட்கவே வேண் டாம்! குழந்தைகளால் யோக மான பலன்கள் குறைவின்றி கிடைக்கும். இவை தவிர, ஒரு சிலருக்கு திருமணமான சில காலத்திலேயே, நீண்ட காலம் காத்திருக்க வேண் டிய அவசியம் இல்லாம லேயே, புத்திர பாக்யம் ஏற் படுகிறது. ஒருவரது ஜாதகத் தில் ஐந்துக்குடையவன் எனப் படும் பூர்வ புண்ணிய ஸ்தா னாதிபதியாகிய கிரகம் லாபஸ்தானம் எனப்படும் பதினோராம் இடத்தில் காணப்பட்டாலும், பிள்ளை களின் யோக பலனை நிர்ண யிக்கும் ஐந்தாம் இல்லத்தின் அதிபதி, தன் சொந்த வீட் டைப் பார்வையிட நேர்த் தாலும் இளவயதிலேயே. நல்ல குழந்தைகளைப் பெறும் யோகசாலிகள் ஆவார்கள். அந்தக் குழந்தைகள் மூலம், அளவில்லாத மகிழ்ச்சியும் வசதிகளும் ஏற்படும்.

''சரி அய்யா! புத்திர தோஷம்'னு ஏதோ சொல் லிப்புட்டு, அது எப்படி நிவர்த்தி ஆகும்? அதுக்கு ஏதாவது பரிகாரம் உண்டா? என்ன விவரம்னு சொல்லிட் டீங்கன்னா சுளுவா இருக் கும்!'' இப்படிப் பலர் கேட் கின்றனர். முதலில் 'தோச த்தை' விளக்கிவிடுகின்றேன். ஜெனன ஜாதகத்தில் ஐந்தா மிடமான புத்திர ஸ்தானத் தின் அதிபதி நீச்சம் அடைந் தாலும், குருபகவான் தன் பலம் இழந்திருந்தாலும், அல்லதுபுத்திர ஸ்தானத்தில், சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது போன்ற அசுபக் கிரகங்கள் வீற்றிருந்தாலும் அல்லது இவர்களால் ஐந்தா வது வீடானது பார்க்கப்பட் டாலும், 'புத்திர தோஷம்' ஏற்படுகிறது. இனி, இதற் கான தீர்வு என்ன என்பதை விரிவாகக்காண்போம். இங்கு குறப்படும் பரிகாரங்களை பொதுவாக நடைமுறையில் செய்து, வழிபாடு புரிவதும், தினமும் சனீஸ்வரனின் ஸ்தோத்திரங்களை மனமுருக பாராயணம் செய்வதும் குறை நீங்க, நலம் காண சிறந்த வழிகள்.

செவ்வாயால் ஏற்படும் புத் திர தோஷம் நீங்க, முருகப் பெருமானை உண்மையோடு வழிபடுவதும், செவ்வாய் காயத்ரியை தினமும் பாராய ணம் செய்வதும் நன்மை தரும்.

'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என் னோற்றான் கொல் எனுஞ் சொல்' என்கிறது திருக்குறள். மகன் தன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமை இவனைப் பிள்ளையாகப் பெறுவதற்கு, இவன் தாய், தந்தை என்ன தவம் செய்தார்களோ என்று ஊரார் வியக்கும் படி, தன் நற்குண, நற்செய்கைகளால் விளங்குவது. உதவி என்று சொன்னதின் மூலம் இருகருத் துகளை ஆழமாகக் கூறி இருக் கிறார்.

அதாவது, ஏற்கெனவே, நல் லகுடியில் பிறக்கும் வாய்ப்பை பெற்றவர்கள், தன் குடும்பப் பெருமையை குலைக்காமல் இருக்க வேண்டும் என்பதை யும், சாதாரண குடும்பத்தில் பிறக்க நேர்ந்தவர்கள் அதற் காக மனம் தளராமல் தம் உழைப்பால், ஒழுக்கத்தால் தாமும் உயர்ந்து, தன் குடும் பத்தை, தான் சார்ந்த சமூ கத்தை உயர்த்தி, அதனால் தன் தாய், தந்தையருக்கு பெருமைசேர்ப்பதும் பிள்ளை களின் கடமை என்பதாகும்.

இதையே ஜோதிடம் நல்ல கிரக அமைப்புகளால் ஏற் படும் ''சத்புத்திர யோகம்'' என்கிறது. நல்ல குழந்தைகள் பிறப்பது எவ்வளவு முக்கி யமோ அதேபோல் அவை குறித்த காலத்தில் பிறப்பதும் முக்கியம். காலா காலத்தில் பிறப்பதும் முக்கியம். கால தாமதமாக குழந்தைகள் பிறப்பதில்தவறுஒன்றுமில்லை யாயினும், அக்குழந்தை கள் வளர்ந்து பெரியவர்களா கும் போது கால இடைவெளி யினால், தாய், தந்தைக்கும், குழந்தைகளுக்கு இடைவெளி ஏற்படுகிறது. இதற்குதான் நம் பெரியவர்கள் காலா காலத்தில் குழந்தை பிறக்க ஆசீர்வதித்தனர். அவரவர் ஜாதகத்தினை நன்கு ஆராய்ந்து இதர கிரகங்க ளின் அமைப்பையும் தெளி வாகச் சீர் தூக்கி பார்த்து, தகுந்த பரிகாரங்களை நன்கு அனுபவம் வாய்ந்த ஜோதிட நிபுணரின் துணை கொண்டு, முறைப்படி செய்தால், புத்திர தோஷம் விலகும். நல்ல குழந் தைகள் பிறக்கும்.

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பித்தானே இந்த நாடே இருக்கிறது. ஐந்தாமிடம் என் னும் பூர்வ புண்ணிய ஸ்தா னத்தில் ராகு, கேது என்னும் அதிபர்கள் அமர்ந்திருக்க நேரிட்டால், ''நாகசாந்தி'' செய்யவேண்டும் என்று கூறப் படுகிறது. புனிதத் தலங்க ளான ராமேஸ்வரம், கா ளஹஸ்தி ஆகிய இடங் களில் ''நாகப்ரீதி'' செய்வதும், அரச மரத்தடியில் நாகங் களை கல்லினால் வடித்து, பிரதிஷ்ட்டை செய்வதும், அப்படி பிரஷ்ட்டை செய்யப் பட்ட நாக வடிவங்கள் நிறைந்த அரச மரத்தை தினமும் ஒன்பது முறை வலம் வருவதும் நலம் பயக்கும்.

இவ்வாறே, சூரிய பகவான் ஐந்தாம் இடம் என்னும் புத் திர ஸ்தானத்தில் இருக்க நேர்ந்தாலோ அல்லது பார்வை செய்தாலோ, புத் திரதோஷம் ஏற்படுமானால், இதற்குப் பரிகாரமாக தினமும் சூரியனை வழிபடுவதும், நவக்கிரக சந்நிதிக்குச்சென்று சூரியனை அர்ச்சித்து வழிபடு வதும், ஆடுதுறைக்கு அரு கேயுள்ள சூரியனார் கோயில் சென்று, அங்கு வழிபடுவதும் நன்மை தரும்.

இவ்வாறே, பிரகஸ்பதியாம் வியாழ பகவானால், புத்திர தோஷம் ஏற்படுமாயின், வியாழக்கிழமை தோறும் விரதம் அனுஷ்டிப்பது, ''தட்சணா மூர்த்தி'' க்கு வழிபாடு நிகழ்த்துவது, போன்ற பரிகாரங்கள் செய் யலாம். மந்தனாம் சனியி னால் தோஷம் ஏற்பட்டு இருந்தால், சனிபகவானுக்கு பிரீதி செய்வது நன்று. சனிக் கிழமைகளில் விரதம் இருந்து, சனிபகவானுக்கு எள்-சாதம் நைவேத்தியம் செய்ய வேண் டும் என்று கூறுகிறார்கள்.

குழந்தைகளை ''புத்திர ஸம்பத்து'' என்றும் குறிப்பிடு வதுண்டு. ஸம்பத்து என்றால் ''செல்வம்'' அந்தச் செல்வம் குறைவின்றி, ('நிறைய' என்றும் அர்த்தமல்ல!) அதா வது எந்தக் குறைகளும் இல் லாமல் அமைய அனுதினமும் ஆண்டவனை பிரார்த்திப்பது எல்லோருக்கும் உகந்த வழி. தூய உள்ளமும், ஏற்றத் தாழ்வு கருதாது, சாதி, மத பேதம் பாராட்டாத, உழைப் பிற்கு அஞ்சாத, ஒளி மிகுந்த சமுதாயத்தை உருவாக்கும் புதுயுகசிற்பிகளைக்கொண்ட வலிமையான எதிர்கால சந் ததி உருவாக, இறைனை நெஞ்சுருக வேண்டி இக்கட்டு ரையை நிறைவு செய்கிறேன். எங்கும் நலம் நிறைக! எல் லோரும் இன்புறுக!

நூலகத்துறைப் படிப்பகம் யாழ்ப்பாணம்

மாணவன் 'சஞ்சீவனின்' கொலை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

அதிபர்கள்சங்கம் அறிக்கை

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சஞ்சீவன் சுட்டுக் கொலை செய்யப்பட்டது குறித்து வடமாகாண அதிபர்கள் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதன் விபரம் வருமாறு:

மிகுந்த துன்பங்களையும், துயரங்களையும் தனது நெஞ்சில் சுமந்தபடி தனது எதிர்காலக்கனவை நனவாக்கவும், தான் தங்கியுள்ள குடும்ப நல்வாழ்வுக்காகவும், சமூகத்திற்காகவும் உழைத்து நின்று தனது கல்விக் கடமையைத் தவிர வேறு பக்கம் தனது கவனத்தைச் செலுத்தாது நின்ற யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் இழப்பு எமது இதய மெல்லாவற்றையும் உலுப்பிவிட்டுள்ளது.

அப்பாவி மாணவனின் மரணத்தால் மாணவச் சமூகம் மட்டுமல்ல முழுத் தமிழ்ச் சமூகமுமே பதற்ற மடைந்துள்ளது. இந்நிகழ்வுக்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் இனம் காணப்பட்டுத் தண்டிக்கப்படும் வரை எமது மக்கள் பாதுகாப்புக்கு எவ்வித உறுதிப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. இந்நிர்ழ்வை எமது வடமாகாண அதிபர்கள் சங்கம் கல்விச் சமூகத்தின் சார்பாக மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காதபடி சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக் கொள்வதுடன் அவர்களின் உறுதி மொழிகள் காப்பாற்றப்பட வேண்டின் சம்பந்தப்பட்டோர் உடன் இனம் காணப்பட்டு தண்டிக்கப்படவேண்டுமென இச் சங்கம் மிகவும் இறுக்கமாக வலியுறுத்துகின்றது.

இதயத்தை நெரிடும் இத் துயரமான நிகழ்விற்கு முகம் கொடுத்து தாங்க முடியாத துயரத்தில் மூழ்கியுள்ள அமரர் சோமசுந்தரம் சஞ்சீவனின் குடும்பத்தவர்களுடன் நாமும் பங்கு கொள்கின்றோம் என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமணத்திற்காகச் செல்வோருக்கு விசேட பயண ஏற்பாடு

சிவில் நிர்வாகம் அறிவிப்பு

திருமணங்கள் மற்றும் சுகயீனம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்ல விரும்பும் பயணிகளுக்கு விசேட பயண ஒழுங்குகள் செய்வதற்கு வசதியாக சிவில் நிர்வாக அலுவலகத்தில் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

திருமண வைபவங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் (மூவர் நால்வரி) பயணம் செய்ய விரும்பம் கொண்டவர்களாக இருப்பதால் இவர்கள் முன்கூட்டியே சிவில் நிர்வாக காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சிவில் நிர்வாகம் கோரியுள்ளது. (வ)

புலிகள்...

தேவானந்தா மேலும் தெரிவித்கையில் கூறியதாவது,

விடுதலைப்புலிகள் தம் போக்கை மாற்றி சமாதான வழிக்கு வருவாரிகள் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை போதுஜன ஐக்கிய முன்னணி அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் உத்தேச அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான தீர்வுத் திட்டத்தை புலிகள் ஏற்றால் என்ன? ஏற்காது விட்டால் என்ன? அதற்காக அரசு காலம் தாழ்த்தாது பொதுத் தேர்தலுக்கு முன் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் புலிகள் சமாதான வழிக்கு வந்தால் அதனை நாம் வரவேற்போம் என்றும் டக்ளஸ் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

அதிசய...

ளது.

இம்மாதம் 31ஆம் திகதியும் அடுத்த மாதம் 2ஆம் திகதியும் சூரியகிரகணம் நிகழவுள்ளதாகவும் அது இலங்கைக்கு தென்படாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று சந்திர கிரணகம் சூரிய அஸ்கமத்திற்கு பின் கிழக்கு வானில் மாலை 7.02 மணியிலிருந்து காணக்கூடியதாக இருக்கும்.

இன்று நிகழும் சந்திரகிரகணம் 141 வருடங்களுக்கு பின்பு உலக மக்கள் அனைவராலும் காணக்கூடியதாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர் அடுத்த வாரம் பூரணசந்திர கிரகணம் 2123 ஆம் ஆண்டு யூன் மாதம் 9ம் திகதியே தோன்றுமென்பதால் இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டவர்கள் தமது வாழ்நாளில் இதனைக் காண முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-7)

46 கட்சிகள் . . .

ருப்பதாகவும் இம்முறை மேலதிகமாக 12 அரசியல் கட்சிகள் அங்கிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்தேர்தல் 1 கோடியே 2 லட்சத்து 71 ஆயிரத்து நூற்றொரு வாக்காளர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

உயிரிழந்த புலிகள் விபரம்

(வவுனியா)

முல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தரைதலான விபத்தின் போது,

- செந்தூரா (குமாரப்பிள்ளை - பிரபாலினி) வட்டக்கச்சி.

சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது

- அன்பு (அந்தோனிப்பிள்ளை - சகாயமா) யாழ்ப்பாணம்
- கருவேங்கை (துரைராஜா - ராஜ்குமார்) யாழ்ப்பாணம் எல்லைப்படை வீரராவர்
- ★ சந்தனம் - தெய்வேந்திரன்) இயக்கச்சி

ஆகியோர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-7)

யுத்தத்தை...

ஐக்கிய நேசியக் கட்சி ஆரம்பித்து நடத்தி வந்த இந்த யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டது. இதனால் நாடு யுத்தத்திற்கு முகம் கொடுத்து வருகிறது. இந்த யுத்தத்திற்கு முடிவு கட்டுவதற்காகவே அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு ஐக்கியதேசியக் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுடனும்பேசிவருகின்றேன்.

சாதாரண மக்களின் ஆதரவு எமது கட்சிக்கு இருப்பதால் இத் தேர்தலை முன்னெடுத்துச் செல்வதில் எந்த வித்மான கஷ்டமும் இல்லை இத்தேர்தலில் கிராம மட்டத்திற்குச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டுமென்று அமைப்பாளர்களை ஜனாதிபதி சந்திரிகா கேட்டுக்கொண்டார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்ரத்தவத்தையுரையாற்றும் போது ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நவம்பர் மாதம் முதல் வாரத்தில் தேர்தல் நடைபெறும்.

கடந்த மாகாண சபைத் தேர்தல் வெற்றியை எமதாக்கிக்கொண்ட எமக்கு இத்தேர்தல் பெரிய விஷயமல்ல எனவே எதுவித அச்சத்திற்கும் இடம் கொடுக்காது அனைவரும் ஒன்று பட்டு செயற்பட்டு வெற்றி அடைய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். (வ)

தொண்டர் ஆசிரியர்களின் கவனத்திற்கு

தொண்டர் ஆசிரியர் சங்கத்தில் பதிவினை மேற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியோர்:

17-07-2000 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு D. M. I. கல்வி நிலையத்துக்கு

சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

— தன்றி —

தலைவர்

தொண்டர் ஆசிரியர் சங்கம்,

யாழ். மாவட்டம்.

(1562)

கஜன்

ஊர்காவற்றுறை

ரஜனி, மீனா

நடித்த

உழைப்பாளி

காட்சி நேரம்

பி.ப 3.30 மணி

(கி/652)

விளையாட்டுச் செய்தி

ஒருநாள் கிரிகெட் போட்டியில் மே. இந்தியதீவுக்கு 169 ஓட்டங்கள்

[கொழும்பு]

இங்கிலாந்தின் 'றிவசைக்' மைதானத்தில் மேற்கிந்திய தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூக்கோண ஒருநாள் கிரிகெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் 8விக்கற்றுக்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இச்செய்தி அச்சுக்கு போகும் வரை இங்கிலாந்து அணி ஆடிக்கொண்டிருந்தது. [வ-4]

முனசிங்கவின் இறுதிக்கு வரதராஜப்பெருமாள்

வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் அ. வரதராஜப்பெருமாள் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சார்பில்நியமனமானபாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெறவுள்ளதாகவும்கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உதவி சபாநாயகர் அணில்முனசிங்காவும் பி பதவியையும் உப சபாநாயகர் பதவியை இராஜினாமாச்செய்பவிருப்பதாக அந்த இடத்துக்கு பெருமாள் நியமிக்கப்படலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

தப்பியோடிய 20,000 படையினரில் இதுவரை எண்ணாயிரம் பேர் கைது

இராணுவத்திலிருந்துதப்பி ஓடிய சுமார் 8000 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக இணைந்து நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தேடுதல் நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுமார் 20,000 படையினர் இவ்வாறு தப்பி ஓடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

நிர்வாக உயரதிகாரிகளை ஜனாதிபதி இன்று சந்திப்பார்

இலங்கையின் நிர்வாக சேவை உயர் அதிகாரிகளை இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவி அரச அதிகாரிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அறிவுறுத்தல்களை வெளியிடுவாரென நம்பப்படுகிறது. (வ)

நிதி ஒதுக்கீடு

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்குவதற்கென ஐம்பது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை அடுத்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்ட இந்நிதி யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பவுஸர்.

றரீ எரிபொருள் கொள்ளக் கூடியனவாகும்.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து பெற்றோல் எடுத்து வரப்பட்ட கப்பலிலேயே இந்த இரு பவுஸர்களும் எடுத்து வரப்பட்டதாகவும் எதிர்வரும்திங்கட்கிழமை முதல் நாளொன்றுக்கு ஒரு லட்சம் லீற்றர் எரிபொருளை யாழ். மாவட்டத்தில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்க முடியும் என்றும் இதனால் அடுத்த வார இறுதிப்பகுதியில் இருந்து எரிபொருளுக்கான தட்டுப்பாடு நீங்கிவிடுமெனவும் வடபிராந்திய பெற்றோலியக்கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இது வரைகாலமும் போதியளவு பவுஸர்கள் இல்லாமையினால் நாளொன்றுக்கு 53 ஆயிரம் லீற்றர் எரிபொருட்களை மட்டும் விநியோகிக்க முடிந்ததாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

நாளை சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த பதில் கடமை புரியும் அதிபர்களை நிரந்தர மாக்கல் தொடர்பான விபரங்களைப் பெறவேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட சகல பதில் கடமை புரியும் அதிபர்களையும் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பதில் அதிபர் நியமனத்துக்கான கடிதத்துடன் சமுகமளிக்கும்படி மேற்படி கல்வி வலயப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (வ(

சஞ்சீவனின்...

நீதிமன்ற நீதிபதி பா. சுப்பிரமணியம் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறும், சடலத்தைப் புதைக்குமாறும் உத்தரவிட்டதை அடுத்தே சடலம் ஒப்படைக்கப்பட்டது

இதேவேளை மாணவனின் கொலை தொடர்பாக யூ. என். எச். சி. ஆர் பிரதிநிதிகளும் நேற்று சம்பவத்தைக் கேட்டறிந்ததாகவும்,

இன்று 512 வது படையணியினரை கல்லூரி அதிபரும் மாணவர்களும் சந்திக்க விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ விதாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைத்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.